# கனடாவில் சைவ சமயம்



வி. கந்தவனம்

# கனடாவிற் சைவ சமயம்
# Saivaism in Canada

வி. கந்தவனம்

ஒன்ராறியோ
இந்து சமயப் பேரவை
கனடா

| | |
|---|---|
| கனடாவிற் சைவ சமயம் | Saivaism in Canada |
| வி. கந்தவனம் | V. Kandavanam |
| எழுத்தமைப்பு: திருமதி தயானி விஸ்வதாசன் | Typesetting: Mrs. Thayani Visvathasan |
| அட்டைப்படமும் வடிவமைப்பும்: Ultra Graphic | Cover Design & Layout: Ultra Graphic |
| வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை கனடா | Published by: Ontario Hindu Religious Society Canada |
| முதற்பதிப்பு: ஆவணி 2000 | First Published: August 2000 |
| அச்சிட்டோர்: விவேகா அச்சகம் | Printed by: Viveka Press |



| | |
|---|---|
| பதிப்புரிமை: வாரணன் கந்தவனம் | Copyright: Varanan Kandavanam |


அட்டைப்படம்:
மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயில் தேர்த் திருவிழா

# பதிப்புரை

தமிழன் தன்னோடு காவிவந்த அரும்பெரும் சொத்துக்களில் அவனது சமயமும் ஒன்று. பண்டு தொட்டு அவன் வாழ்வில் பின்னிப் பிணைந்து இருப்பது அவனது மொழியும் சமயமும். சமய உணர்வு, பற்று, பழக்கவழக்கங்கள் அவனது அக வாழ்விலும் புறவாழ்விலும் பெரும் பங்கை வகிக்கிறது. தொட்டில் தொட்டு சுடுகாடு வரை அதன் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது.

அவனது கனடா வாழ்வின் வளர்ச்சிப்படியில் சமயமும் இணைந்து காணப்படுகிறது. கனடாவில் வீட்டில் குளோசெட்டினில் மூன்று நான்கு தட்டுகளில் மேற்தட்டில் பழைய உடுபுடவைகள், நடுத்தட்டில் இறைவன் படங்கள், கீழ்த்தட்டில் பல உடைந்த பொருட்கள் இருக்க சங்கடமான நிலையில் வழிபடவேண்டிய நிலை. கோயில் காளைகள் போல கரப்பான் பூச்சிகளும் இருப்பதுண்டு.

இந்த நிலையில் ஆலயங்களின் பங்கு சமூக சமய வாழ்வில் முக்கிய இடம் வகிக்கின்றன.

இவ்வேளை பொருத்தமற்ற சிலரது உள்நோக்குடன் பொதுவிடங்களில் ஈடுபடுவதினால் 'வெயகவுஸ் எங்கும் ஆலயம்', 'பூநூல் போட்டால் உழைக்கலாம்' 'எதற்கு இத்தனை கோயில்கள்' என்ற அதிருப்தியான கோசங்களும் எழுகின்றன.

இந்த கோசங்கள் தோட்டத்தில் களைகளைப் பிடுங்குவதற்குப் பதிலாக தோட்டத்தையே எரித்துவிடப் பார்க்கின்றன. களைபிடுங்கவேண்டுமென்பதற்காக களையோடு

பயிரையும் அழித்து விடக் கூடாது.

இந்த நிலையில் சமய, சமூகப் பணிகளில் அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் எம் இந்து சமயப் பேரவைக் காப்பாளர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் 'கனடாவிற் சைவ சமயம்' என்னும் இந்நூல் முதன்மையானதும் சிறப்பானதும் விரிவாக்க அடிகோலுவதாகவுள்ளது.

இந்நூலை வெளியிடுவதில் இந்து சமயப் பேரவை மிகவும் பெருமைப்படுகிறது.

சாமி அப்பாத்துரை
தலைவர்
இந்து சமயப் பேரவை

# முன்னுரை

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கனடாவில் 1994ஆம் ஆண்டு நான்காவது அனைத்துலகச் சைவ மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கு பற்ற வேண்டுமென்று அடியேனுக்கும் அழைப்பு ஒன்றை விடுத்தார் சைவப் பெரியார் திரு. நா. சிவலிங்கம் அவர்கள். அழைப்பு என்பதிலும் பணிப்பு என்பது பொருந்தும். கடவுள்தான் கட்டளை இடுகின்றார் என்று கருதிப் பணிந்தேன்.

என்ன வகையிற் பங்கு பற்றலாம்? சைவ சமயத்தில் எவ்வளவோ விடயங்கள் எழுதப்பட்டு விட்டன; பேசப்பட்டுள்ளன. புதிதாக நாம் என்னத்தைச் சொல்லப் போகின்றோம்; சொல்லத்தான் என்ன இருக்கிறது என்பன போன்ற கேள்விகளை எழுப்பிக்கொண்டு அவற்றுக்கு விடை காண முயன்று கொண்டிருந்தகாலை, வெளிநாடுகளிலிருந்து பல அறிஞர்கள் பங்கு பற்ற உள்ளனர் என்ற செய்தியை உறுதிப்படுத்தினார் அமைப்பாளர்களில் ஒருவரான அன்பர் சக்தி அவர்கள்.

வெளிநாடுகளிலிருந்து வருவோர் புலம் பெயர்ந்து வாழும் நாம் சைவத்தை எந்த அளவுக்கு இங்கு வளர்க்கிறோம் என்பதை அறிய விரும்புவர் என்று கருதி அவர் பொருட்டு 'கனடாவிற் சைவ சமயம்' என்ற பொருளில் ஒரு கட்டுரையை எழுதினேன்.

அதனையே 03–07–1994 ஞாயிற்றுக்கிழமை மாலை யோக் பல்கலைக்கழகத்து கர்டிஸ் அரங்கில் எனது தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கத்தின் முன்னுரையாகவும் சமர்ப்பித்தேன்.

கருத்தரங்க முடிவில் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் கட்டுரையை மதித்து விதந்து, பிரதி ஒன்றையும் பெற்றுக் கொண்டார். பின்னாளில் சமயப் பத்திரிகைகள் சிலவற்றில் அதனை வெளிவரச் செய்தார் என்றும் அறிந்தேன்.

நான்காவது அனைத்துலகச் சைவ மாநாட்டுக்கு அன்று எழுதிய கட்டுரையின் விரிவே இந்நூல். 1994க்கும் 1999க்கும் இடையில் கனடாவிற் சைவத்துறையில் எவ்வளவோ சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. விவரங்கள் பெரிதும் சொந்த அனுபவங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள் முதலியவற்றிலிருந்தே பெறப்பட்டுள்ளன. சில விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு நண்பர்களையும் நாடவேண்டியிருந்தது. அந்த உதவிகளைச் செய்த திருவாளர்கள் ச. திருநடராசா, க. தெ. சண்முகராசா ஆகியோருக்கும் இந்நூல் ஆக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

கனடாவின் சைவ சமய வரலாற்றில் இது ஒரு புதிய முயற்சி; முதல் முயற்சி. அதனாற் குறைகள் ஏற்படுவது இயல்பு. அவற்றை அன்பர்கள் தெரிவிப்பின் அடுத்த பதிப்புகளில் நிவர்த்தி செய்ய உதவியாக இருக்கும்.

சைவ சமயத்தின் உண்மையான வளர்ச்சி அக வளர்ச்சியேயாகும். அக வளர்ச்சி என்பது உள்ளத்தின் சிவமயப் பக்குவம். அதுவே சைவ நீதியை நிலைநாட்டும் வல்லமை உடையது. பக்குவ நிலை பல படிகளை உடையது. 'பேணு தத்துவங்கள் என்னும் பெருகுசோபானம்' என்பார் சேக்கிழார் பெருமான். அதனால், அது ஆளுக்காள் வேறுபடும் இயல்புடையது. அக வளர்ச்சியின் சில தன்மைகளை அவரவர் செய்கைகளால் ஓரளவுக்கு அறியலாம் எனினும் முழுமையான பக்குவத்தை அந்த முழுமுதலன்றி மற்றையோர் அளவிடல் அரிது. இத்தன்மையால் புற வளர்ச்சியே இந்நூலிற் பெரிதும் பேசப்படுகின்றது என்பது சொல்லாமலே போதரும்.

சைவ சமயத்தின் புற வளர்ச்சி காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்து வந்த நிலைமைகளை அதன் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அந்த வகையில் கனடாவின் சூழ்நிலையும் வாழ்க்கை முறையும் சிலவகை மாற்றங்களைச் சைவ வழிபாட்டு முறையில் ஏற்படுத்தும். அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன வெனினும் குறிப்பிடத்தக்க பெரும் மாற்றங்கள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அவ்வித மாற்றங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமைதல் கூடும்.

இதனை எழுத உதவிய நண்பர்களுக்கும் புகைப்படங்களை உபகரித்த அன்பர்களுக்கும் எழுத்தமைப்புச் செய்த திருமதி தயானி விஸ்வதாசன் அவர்களுக்கும் அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவிய திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களுக்கும் அட்டைப்படத்தை ஆக்கித்தந்த அல்ரா கிராபிக் தாபனத்துக்கும் அழகான முறையில் அச்சிட்ட விவேகா அச்சகத்துக்கும் நூலை வெளியிடும் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவைக்கும் எல்லாம் வல்ல சிவபெருமானின் பெருங்கருணைத் திறம் கிட்டுவதாக!

– வி. கந்தவனம்

# வாழ்த்துரை

கனடாவில் 1994ல் நடைபெற்ற அனைத்துலக சைவ சமய மாநாட்டில் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் ‘கனடாவிற் சைவ சமயம்’ என்ற தலைப்பில் எழுதி வாசித்த கட்டுரையை மாநாட்டுப் பேராளர்களும், மற்றையோரும் பாராட்டினர். கடந்த ஆறு ஆண்டுகளிற் கனடாவில் நடைபெற்ற நிகழ்வுகளையும் உள்ளடக்கி அக்கட்டுரை இப்பொழுது விரிவான ஒரு நூலாக வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நூல் 16 அதிகாரங்களைக் கொண்டது.

நூல் ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் சிறந்த சிந்தனையாளர், பேச்சாளர், பண்பட்ட எழுத்தாளர், புலமை மிக்க கவிஞர், ஆராய்ச்சியாளர், சமூகத் தொண்டர் எனப் பல்துறை வல்லுனர். பல நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பும் ஈடுபாடும் கொண்டிருப்பதோடு தேவையான இடங்களில் ஆலோசனைகளும் அளித்து வருகிறார். இவரின் ஆய்வில் வரும் இந்நூல் சிறந்த ஒரு வரலாற்று நூல் என்று கொள்ள இடமுண்டு.

கனடாவிற் சைவத் தமிழர்கள் கூடுதலாக இருக்கும் ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டுமன்றி கியூபெக், அல்பேட்டா முதலிய ஏனைய மாகாணங்களிலும் கோயில்கள், சைவ சமய மன்றங்கள் உருவாகி உள்ளன. அவற்றைப் பற்றியும் ஆய்வுகள் நிகழ்த்தி எடுத்துக் கூறுவது பாராட்டுக்குரியது.

சைவ சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது என்பதனையும், அது இந்தியாவின் மூத்த சமயம் என்பதனைச்

சிந்து வெளி நாகரிகமும், கரப்பா–மொகஞ்சதாரோ அகழ் வாரய்ச்சிகள் நிரூபிக்கின்றன எனவும் சரித்திர பூர்வமான ஆதாரங்களை எடுத்து விளக்கிச் செல்கிறார்.

கனடாவில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக சைவ மாநாடு, சிவயோக சுவாமிகள் 125வது ஜெயந்தி விழா, ஏழாவது உலகச் சைவ மாநாடு என்பனவற்றை விபரித்து அவற்றால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சைவ மரபு பற்றிய விழிப்புணர்வையும், அவை வருங்கால சந்ததியினரிடம் வளர்க்க வேண்டிய பொறுப்புணர்வையும் ஏற்படுத்தின என்கிறார்.

சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் உலகெங்கும் சைவத்தைப் பரப்பும் பணியில் முன்னின்று உழைத்து வருபவர். அவரது பணிகளையும், ஆர்வத்தையும் விரிவாக எடுத்துக் கூறிப் போற்றுகிறார். ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும், அருள்ஞானி விஷ்ணு தேவானந்த சுவாமி அவர்களும் ஆற்றிய பணிகளையும் குரு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் விபரித்துக் கூறியுள்ளார்.

சைவ சமய வளர்ச்சி என்பது கோயில் வழிபாடு, கிரியைகள், திருவிழாக்கள், சமய விழாக்கள் சமயம் கற்பித்தல் முதலிய செயற்பாடுகளோடு நின்றுவிடாது, சைவ நாயன்மார்களும், மற்றைய அருளாளர்களும் வாழ்ந்து காட்டிய சைவ வாழ்க்கையை அன்புநெறி நின்று வளர்க்க வேண்டும் எனவும் சமயம், சமூகத் தொண்டாக மிளிர வேண்டும் எனவும் வற்புறுத்திச் செல்கிறார்.

'கனடாவிற் சைவ சமய வளர்ச்சி' என்னும் இந்நூல் பல அரிய சிந்தனைகளுக்கு வித்திட்டுள்ளது எனலாம். ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களது பல்துறை சார்ந்த அனுபவங்கள், ஆற்றல்கள், சிந்தனைத் தெளிவு என்பனவற்றைப் பாராட்டிப் போற்றி, அவரின் பணி மேன்மேலும் சிறந்து விளங்கச் சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

தி. விசுவலிங்கம்
தலைவர், கனடா சைவ சித்தாந்த மன்றம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 3 |
| | முன்னுரை | 5 |
| | வாழ்த்துரை | 8 |
| 1. | இந்து சமயம் | 13 |
| 2. | சைவ சமயம் | 17 |
| 3. | சைவக் கனடியர் | 22 |
| 4. | கோயில்கள் | 26 |
| 5. | கோயில்களின் சமூகப் பணிகள் | 36 |
| 6. | சைவம் வளர்க்கும் மன்றங்கள் | 40 |
| 7. | அந்தணர் பணிகள் | 50 |
| 8 | 'சரவணாஸ்' கலைக்கூடத்தின் பணிகள் | 55 |
| 9. | சைவ வெளியீடுகள் | 59 |
| 10. | பேசத் தகுந்த பெருநிகழ்வுகள் | 65 |
| 11. | சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி | 74 |
| 12. | ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா | 82 |
| 13. | அருள்ஞானி விஷ்ணு தேவானந்த சுவாமி. | 88 |
| 14. | குருவழிபாடு | 92 |
| 15. | சமய வளர்ச்சிக்குத் துணையாகவுள்ள காரணிகள் | 99 |
| 16. | இடர்ப்பாடுகளும் கடப்பாடுகளும் | 106 |
| | துணைநூல்கள் | 113 |
| | சஞ்சிகைகள் / மலர்கள் | 114 |
| | பின்னிணைப்பு - 1 | 115 |
| | பின்னிணைப்பு - 2 | 117 |



இறிச்மண் ஹில் ஸ்ரீ வரசித்தி விநாயகர்

# 1

# இந்து சமயம்

இந்து சமயம் உலகத்துப் பழைமை வாய்ந்த சமயங்களில் ஒன்று. அது எப்பொழுது தொடங்கப்பட்டது, எவ்விதம் வளர்ந்தது என்பன போன்ற விவரங்கள் இதுவரை எவருக்கும் சரிவரத் தெரியாதவையாகவே உள்ளன. அவ்வளவுக்கு அது பழைமை வாய்ந்தது. ஆனால் இன்றுள்ள பல சமயங்களைப் போன்று தனிப்பட்ட ஒருவரால் அது தோற்றுவிக்கப்படவில்லை என்பதும் அது தோன்றி வளர்ந்தது இந்தியத் துணைக் கண்டத்தில் என்பதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மைகளாகும்.

இந்தியாவின் குடித் தொகையில் 80சதவீதத்தினர் (100 கோடி மக்கள்) இந்துக்கள். இந்தியா என்ற பெயரும் இந்து என்ற பெயரும் சிந்து என்ற இந்து நதியின் ஆதிப் பெயரிலிருந்து பெறப்பட்டன.

சிந்து நதிப் பள்ளத்தாக்கில் கரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிந்து நதிப் பள்ளத்தாக்கில் இந்து சமயக் கலாச்சாரம் வளர்ந்தோங்கியிருந்த தகவல்களைத் தந்துள்ளன. அக்காலம் முதலாக இந்தியத் துணைக் கண்டத்தின் (இந்தியா, நேபாளம், இலங்கை, இந்தியாவிலிருந்து பிரிந்துள்ள பாக்கிஸ்தான், பாக்கிஸ்தானிலிருந்து பிரிந்துள்ள வங்களா தேசம் மற்றும் நாடுகளின்) பிரதான சமயமாக இந்து சமயம் விளங்கி வந்துள்ளது.

காலப் போக்கில் உலகின் பிற பகுதிகளிலும் இந்து சமயம் பரவத் தொடங்கியது. இன்று இந்துக்கள் குடியேறிய பர்மா, சிங்கப்பூர், மலேசியா, பிஜி தீவுகள், மொரிசியஸ், மாலை தீவுகள், தென் ஆபிரிக்கா, கயானா, திரினிடாட் போன்ற நாடுகளில் இந்து சமயம் நன்கு நிலைகொண்டுவிட்டது. இந்தோனேசியாவில் உள்ள ஆயிரக் கணக்கான தீவுகளில் பாலி என்னும் தீவில் மக்கள் அனைவருமே இந்துக்களாக வுள்ளனர்.

எனினும் இந் நாடுகளில் எல்லாம் ஒரே வகையான வழிபாட்டு முறைகள் பின்பற்றப் படுகின்றன என்று சொல்வதற்கில்லை. அதற்குக் காரணம் இந்து சமயத்திற் காணப்படும் சுதந்திரமும் அதன் பிரிவுகளுமாகும்.

## சுதந்திர சமயம்

இந்து சமயம் ஒரு போதனைச் சமயம் அன்று. அது ஒரு சாதனைச் சமயம். அதாவது, அனுபவித்து அறிந்துகொள்ள வேண்டிய சமயம். அனுபவிப்பதற்குச் சட்டதிட்டங்கள் வைக்க முடியாது. அதற்குச் சுதந்திரம் அவசியம். அந்தச் சுதந்திரத்தை இந்து சமயம் அனைவருக்கும் அளிக்கும் வகையில் வளர்ந்துள்ளது.

இத்தகைய சுதந்திரமே இந்து சமயத்திற் பல மகான்கள் காலத்துக்குக் காலம் தோன்றவும் இறையன்பை வளர்க்கவும் பல சமயங்கள் உருவாகவும் அவை பிரிந்து வேறாக இயங்கவும் காரணமாக இருந்திருக்கின்றது. புத்தம், சமணம், சீக்கியம் போன்ற சமயங்களுக்குத் தாய்ச் சமயம் இந்து சமயம். இவ்விதம் பல கிளைகள் தோன்றிப் பிரிந்தபோதும் அடிமரம் அசையாது இந்து சமயமாகவே இருந்து வருகின்றது.

எல்லா உயிர்களுக்கும் உரிமை அளிப்பதோடு இயற்கைச் சூழலுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் பெருமையுடையது இந்தச் சமயம். இது போன்ற வழிபாட்டுச் சுதந்திரமுள்ள சமயம் உலகில் வேறு எதுவும் இல்லை. இதனாலேயே

இந்து சமயத்திற் பல தெய்வங்கள், பல கிளைகள், பல தத்துவங்கள், பல விதமான வழிபாட்டு முறைகள்.

## இந்து சமயக் கிளைகள்

இந்து சமயப் பிரிவுகளில் பிரதானமானவை ஆறு. அவை சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் எனப்படுவன.

1. சைவம் – சிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றுவது.
2. வைணவம் – விஷ்ணுவை (திருமாலை) பிரதான தெய்வமாக வணங்குவது.
3. சாக்தம் – சக்தியே சிறந்த தெய்வமெனக் கொள்வது.
4. கௌமாரம் – முருகனுக்கு முதன்மை அளிப்பது.
5. காணபத்தியம் – கணபதியே கண்கண்ட தெய்வமெனக் கருதுவது
6. சௌரம் – சூரியனை வணங்குவது.

இவற்றுள் சைவமும் வைணவமும் இன்று பெருந்தொகை மக்களாற் பின்பற்றப்பட்டு வரும் பெருநெறிகளாக விளங்குகின்றன. வைணவம் இந்தியாவின் வடபகுதிகளில் வேரூன்ற, சைவ சமயம் தென்பகுதிகளில் நிலைபெறலாயிற்று. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று மணிவாசகர் பாடியதும் இவ்வளர்ச்சி பற்றியேயாம்.

எனினும் இவ்விரு பெருநெறிகளும் கலந்து வளர்ந்த தன்மைளை வடநாட்டில் உள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களும் தென்னாட்டில் காணப்படும் வைணவ தலங்களும் எடுத்துக் காட்டுகின்றன. சங்ககாலத்தில் மாயோன் (விஷ்ணு) தமிழர்களின் முல்லை நிலக் கடவுளாகப் போற்றப்பட்டான். தொல்காப்பியம், புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, கலித்தொகை, நற்றிணை ஆகிய நூல்கள் மாயோன் பற்றிய பல விவரங்களைக் கொண்டுள்ளன.

காலப் போக்கில் சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் போன்ற வழிபாட்டுப் பிரிவுகளையும் தன்னுடன் சம்பந்தப்படுத்திச் சைவ சமயம் பரந்துபட்ட ஒரு சமயமாகத் தழைத்தமை அதன் தனிச் சிறப்பாகும்.

இதுகாறுங் கூறியவற்றால் இந்து சமயம் பரந்துபட்ட ஒரு பெரிய சமயம் என்பதும் அதன் பல பிரிவுகளிற் சைவ சமயமும் ஒன்று என்பதும் தெளிவாகும்.

கனடாவிற் பல சைவர்கள் கேட்கும் கேள்வி இது: 'நாம் இந்துக்களா, சைவர்களா?'

கிறித்தவ சமயத்திற் கத்தோலிக்கம், அங்கிலிக்கம், புரட்டஸ்தாந்து, ஆர்தடக்ஸ் என்று பல பிரிவுகள் இருப்பினும் அவர்களது சமயம் உலகத்தவரால் கிறித்துவம் என்னும் பொதுப் பெயராலேயே அழைக்கப்படுகின்றது. அதுபோல் இந்து சமயத்தின் பல பிரிவினரும் உலகத்தின் கண்ணுக்கு இந்துக்களாகவே தெரிகின்றனர். அவ்வளவுக்கு இந்து (Hindu), இந்து சமயம் (Hinduism) என்னும் சொற்கள் உலகவழக்கில் பிரபலமாகி விட்டன. உட்பிரிவுகள் பற்றிப் பிற பொது மக்களுக்குத் தெரிய நியாயமில்லை.

நாம் சைவ சமயத்தவர்தாம். ஆனால் அது இந்து சமயத்தின் ஒரு பிரிவு. இங்குள்ளவர்கள் உங்கள் சமயம் என்ன என்று கேட்டால் அவர்களுக்கு உங்கள் சரியான நெறியைப் பின்வருமாறு தெரியப்படுத்தலாம்: 'I am a Hindu, belonging to the Saiva Church.'

# 2

# சைவ சமயம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கும் சமயம் சைவ சமயம். சைவ சமயமே இந்தியாவின் மூத்த சமயம் என்பதனைச் சிந்துவெளி நாகரிகம் எடுத்துக் காட்டுகின்றது. கரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சிகள் இன்று எமக்குத் தெரிந்த சிவனையொத்த வடிவங்களையும் பிற சிவ வழிபாட்டுடன் தொடர்புடைய சின்னங்களையும் முத்திரைகளையும் கோயிற் கட்டிடங்களையும் வெளிக் கொணர்ந்துள்ளன. அதனால் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு (கி. மு. 1500) வெகு காலத்துக்கு முன்னதாகவே (கி. மு. 5000) சைவ சமயம் இந்தியாவில் வளர்ந்திருந்தது என்பது தெரிகின்றது.

சைவ சமயம் வரலாற்றுக்கு முற்பட்ட சமயம் என்பதை சிந்துவெளி அகழ்வுச் சின்னங்களை ஆராய்ந்த சேர் ஜோன் மாஷல் (Sir John Marshall) என்பவர் தெரிவித்த முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. அவரின் கருத்துக்களில் ஒன்று பின்வருமாறு:

‘ Among the many revelations that Mohenjadaro and Harappa have in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivaism has a history going much to the chalcolithic age or perhaps even further still, and that it takes place on the most ancient living faith in the world.’ [1]

## மூவகைச் சைவம்

இந்தியாவில் இன்று பின்பற்றப்படும் சைவம் மூவகைப்பட்டது.

அவை காச்மீர சைவம், வீர சைவம், சித்தாந்த சைவம் என்பன.

காச்மீர சைவம், காஷ்மீர் மாநிலத்தில் தோன்றி வளர்ந்து இந்தியாவின் வட பகுதிகளில் நிலவுவது. வீர சைவம் கன்னட நாட்டிலும் இந்தியாவின் பிற மத்திய பகுதிகளிலும் பின்பற்றப்படுவது. சித்தாந்த சைவம் தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மேலை நாடுகளிலும் வழங்கிவருவது.

இம் மூவகைச் சைவங்களிலும் சில தத்துவார்த்த, வழிபாட்டு வேறுபாடுகளன்றி அடிப்படைக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. அடிப்படைக் கொள்கையாவது ஆன்மா சிவ வழிபாட்டினால் முத்தியடையும் என்பது.

இந்தியாவின் தென் பகுதியிற் சைவம் தொன்றுதொட்டே நிலவி வந்திருக்கின்றது. இந்தக் கருத்தை முதன்முதலில் வலியுறுத்தியவர் G.U.Pope என்பவர். இவர் வெஸ்லியன் சங்கத்தாரால் சமயப்பணி செய்தற் பொருட்டு தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பெற்றவர்; தமிழ்மொழியைக் கற்றுத்தேர்ந்தவர்; திருக்குறளையும் திருவாசகத்தையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழின் சிறப்பைத் தரணியெங்கும் பரப்பியவர். கிறித்துவப் பணிபுரிய வந்த இந்த அறிஞர் தென்னாட்டுச் சைவத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

‘ Saivaism is the oldest prehistorian religion of South India, essentially existing from pre-Aryan times.’ [2]

தென் இந்தியாவின் மிகப் பழைய சமயமாகச் சைவம் இருந்தபொழுதிலும் அதன் வளர்ச்சி தொடர்ச்சியாக இருக்க வில்லை என்பதனை வரலாறு காட்டுகின்றது. சங்க காலத்தில் (கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்) நிலத்துக்கு நிலம் வெவ்வேறு வகையில் சைவ சமயம் பின்பற்றப்பட்டமை இலக்கியங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. சங்க மருவிய காலம் என்று சொல்லப்படுகின்ற களப்பிரர் காலத்தில் (கி. பி. 300−600) தமிழ் நாட்டின் பல பகுதிகளில் பௌத்தமும் சமணமும் பரவியிருந்தன.

பல்லவர் காலத்தில் (கி. பி. 600–900) சைவம் மீண்டும் தழைக்கத் தொடங்கியது, இக் காலப் பகுதியிலேதான் நாயன்மார்கள் தோன்றிப் பக்தி மார்க்கம் மூலம் சைவத்தை வளர்த்தெடுத்தனர்.

நாயன்மார்களும் அவர்களுக்குப் பின்வந்த சிவஞானிகள் பலரும் பாடிய பாடல்களின் தொகுப்பு திருமுறைகள் எனப்படும்.

திருமுறைகள் பன்னிரண்டு. அவையாவன:

**திருமுறை**

| | | |
|---|---|---|
| 1 – 3 | : | திருஞானசம்பந்தர் தேவாரங்கள் |
| 4 – 6 | : | திருநாவுக்கரசர் தேவாரங்கள் |
| 7 | : | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள் |
| 8 | : | மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் |
| 9 | : | திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (பல அருளாளர்கள் பாடியவை) |
| 10 | : | திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் |
| 11 | : | பன்னிரு அருளாளர்களின் நாற்பது பிரபந்தங்கள் |
| 12 | : | சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம் |

**சைவ சித்தாந்தம்**

இடத்துக்கிடம் சைவம் வேறுபடுவது போலவே காலத்துக்குக் காலமும் சைவம் வெவ்வேறு முறைகளிற் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இன்று தமிழர் போற்றும் சைவம் சைவ சித்தாந்தம் எனப்படுகின்றது.

சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்று பொருள். சித்தம் – முடிபு. அந்தம் – முடிபு. அதாவது நன்கு நிறுவப்பெற்ற முடிபு. என்ன முடிபு? ஆன்மா (உயிர்) சிவத்துடன் அத்துவிதப்படுதல். அத்துவிதமாவது இரண்டறக் கலத்தல். அதாவது, பரம்பொருளாகிய சிவத்துடன் ஆன்மா பிரிக்கமுடியாதவாறு ஒன்றுபடல். இதுவே முத்திநிலை எனப்படும்.

முத்திநிலையை அடைதலே சைவ நெறியின் இறுதி முடிபு ஆதலால் சித்தாந்தம் 'முடிந்த முடிபு' ஆயிற்று.

சிவம் பதி என்றும் ஆன்மா பசு என்றும் அழைக்கப்படும். பசு சிவத்தை அடைய அதன் பாசங்களை (மலங்களை)க் களைதல் வேண்டும். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகள். இவற்றின் இயல்புகளைச் சைவ சித்தாந்த நூல்கள் விளக்குகின்றன. இவை மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. அவை பின்வருமாறு:

1. சிவஞானபோதம் – மெய்கண்டார்
2. சிவஞான சித்தியார்
3. இருபா இருபஃது – அருணந்தி சிவாச்சாரியார்
4. திருவுந்தியார் – திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்
5. திருக்களிற்றுப்படியார் – திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்
6. உண்மை விளக்கம் – மனவாசகங்கடந்தார்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப் பஃறொடை – உமாபதி சிவாச்சாரியார்
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடு தூது
13. சங்கற்ப நிராகரணம்
14. உண்மை நெறி விளக்கம்

திருமுறைகள் தோத்திர நூல்கள் என்றும், மெய்கண்ட சாத்திரங்கள் சைவ தத்துவ விளக்க நூல்கள் என்றும் வழங்கப்பெறும். இந்நூல்கள் வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றின் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதால் சைவ சித்தாந்தத்தை 'வேதாந்தத் தெளிவு' என்று உமாபதி சிவாச்சாரியார் 'சிவப்பிரகாசத்தில்' விளக்கியுள்ளார்.

ஆக, திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களுமே சைவ சித்தாந்தத்தின் மூல நூல்கள். அவற்றுள்ளும் சைவ தத்துவங்கள் அனைத்தையும் உள்ளடக்கித் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்கும் திருமந்திரம் சைவ சமய நெறியில் நிற்கும் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய இன்றியமையாத நூலாகும். கிறித்தவ சமயத்துக்கு விவிலியம்போல் சைவத்துக்குத் திருமந்திரம்.

---

1. Marshall, J., Mohenjadaro and the Indus Civilization (Vol. 1 p. VIII), 1931
2. Pope, G.U., Tiruvacagam.



கனடா கந்தசாமி கோயில் உற்சவ மூர்த்திகள்
பிரதிஷ்டாபிஷேகம் - 1994

# 3

# சைவக் கனடியர்

கனடாவில் தற்பொழுது சைவ சமயத்தை வளர்ப்பதில் முன்னிற்பவர்கள் ஈழத்திலிருந்து வந்த சைவத் தமிழ் மக்கள். அவர்களின் சைவப் பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்தது.

ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே சைவம் வளர்ந்தோங்கி இருந்ததை இராமாயணம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவ பக்தன்; தவ சீலன்; தவங்கள் இருந்து சிவனிடத்திற் பல வரங்களைப் பெற்றவன். அவனது நெற்றியில் சிவ சின்னமாகிய திருநீறு எப்பொழுதும் இலங்கும். அத்தகைய சிவ பக்தனை 'இராவணன் மேலது நீறு' என்று பாடிச் சிறப்பித்தார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

இலங்கைக்கு விஜயன் வந்த காலத்திலும் (கி. மு. 483) சைவம் சமயம் மேலோங்கி இருந்தது. தேவநம்பியதீசன் காலத்தில் (கி. மு. 247 –207) இலங்கையில் பௌத்தம் பரவியது. எனினும் எல்லாள மன்னன் (கி. மு. 145 – 101) ஆட்சிக் காலத்தில் தழைக்கத் தொடங்கிய சைவம் இன்றுவரை தமிழரின் பெருநெறியாக விளங்கி வருகின்றது.

இடையில் ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து சைவ சமயத்துக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைந்து, மேன்மைகொள் சைவ நீதியை ஈழத்தில் நிலைநாட்டச் சைவப் பெரியார்கள் பலர் உழைத்தனர். அவர்களுள் ஆறுமுக நாவலர் பெருமான்

(1822 – 79) தலையாயவர். அவரைத் தொடர்ந்து அவரது மாணவர் பரம்பரை மேற்கொண்ட தொண்டுகளின் விளைவாக சைவ சமயம் தொடர்ந்து ஈழநாட்டில் வளரலாயிற்று.

ஈழத்துச் சைவத் தமிழர் தாம் குடியேறிய நாடுகளிலும் சைவப் பாரம்பரியங்களைப் பேணிவருகின்றனர்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இவர்கள் மலாயா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுச் சென்றனர். சுதந்திர இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் இனத்துவேசக் கலவரங்கள் காரணமாகப் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்கா, கனடா, அவுத்திரேலியா முதலியவற்றுக்கும் ஈழத்துத் தமிழர் புலம் பெயர்க்கப்பட்டனர். இந்நாடுகளில் எல்லாம் இவர்கள் சைவத்தை வளர்த்து வருகின்றனர். அன்று சைவர்கள் மத்தியில் கிறித்துவ சமயத்தைத் திட்டமிட்டுப் பரப்பிய நாடுகளில் இன்று சைவம் வளர்ந்து வருவதைப் பார்க்கையில் தெய்வத்தின் திருவிளையாடல் தெளிவாகத் தெரிகின்றது.

## கனடாவின் கண்ணோட்டம்

இலங்கையில் நடந்த கலவரங்களில் 1983 யூலாயில் நடந்த கலவரம் மிகக் கொடூரமானது; மிருகத்தனமானது! நூற்றுக் கணக்கானவர் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக் கணக்கானவர் காயமுற்றனர். உடைமைகளை இழந்து, வீடு வாசல்கள் எரிக்கப்பட்டு, அவதியுற்று அகதிகளானோர் தொகையும் எண்ணிலடங்கா.

சிங்களவரோடு சேர்ந்து வாழும் சிறுமையை வெறுத்த தமிழர் பிறந்த பொன்னாட்டையும் துறக்கத் துணிந்தனர். எந்தெந்த நாடுகளுக்கெல்லாம் செல்ல முடியுமோ அந்தந்த நாடுகளில் எல்லாம் தஞ்சம் புகுந்தனர். 1983 யூலாயை அடுத்து அதிக அளவில் நிகழத் தொடங்கிய இப் புலப் பெயர்வு இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

கனடா அகதிகளுக்குக் காட்டிவரும் தாராளக் கொள்கையாலும்

மனிதாபிமானத்தாலும் தமிழர் பெருந்தொகையில் இங்கு குடியேறக் கூடியதாக இருந்தது.

*1986*ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ *5000* தமிழ் மக்களே கனடாவில் இருந்தனர். நாளடைவில் இத்தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. *1989* ஜனவரியில் ஜெனிவா ஒப்பந்த (Convention Refugees) அடிப்படையில் அகதிகளை ஏற்றுக் கொள்ளும் முறை கனடாவில் நடைமுறைக்கு வந்தது. இதனால் அரசியல்/இனப்பிரச்சனைகள் கொடூரமாகத் தொடரும் நாடுகளிலிருந்து அகதிகள் இங்கு அதிக அளவில் வரக்கூடியதாக இருந்தது.

*1996*ல் தமிழ்க் கனடியர் தொகை *66,820* என்பது அரசாங்கத்தின் கணக்கெடுப்பு. இவர்களிற் பெரும்பான்மையோர் ஒன்ராறியோ மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களின் மாகாணவாரியான பரம்பல் பின்வருமாறு:[1]

| | 1986 | 1996 |
|---|---|---|
| நியூபவுண்லாந்து | 35 | 125 |
| பிரின்ஸ் எட்வேட் தீவு | 5 | 0 |
| நோவஸ்கோசியா | 50 | 155 |
| நியூ பிரன்ஸ்விக் | 15 | 20 |
| கியூபெக் | 1400 | 7690 |
| ஒன்ராறியோ | 2540 | 56425 |
| மனிற்றோபா | 100 | 285 |
| சாஸ்கச்சுவான் | 70 | 195 |
| அல்பேட்டா | 415 | 775 |
| பிரிட்டிஷ் கொலம்பியா | 250 | 1135 |
| யுக்கோன் | 0 | 0 |
| வடமேற்குப் பிரதேசம் | 15 | 15 |
| மொத்தம் | 4895 | 66820 |

*1996*ஆம் ஆண்டுக்குப் பின் அகதி கோரியவர்களையும் பொறுப்பேற்பில் இங்கு வந்து சேர்ந்தவர்களையும் சேர்த்து

இன்று தமிழ் மக்களின் தொகை 150,000 ஆக இருக்கும் என்பது கனடாக் குடிவரவுடன் தொடர்புடைய பலரின் மதிப்பீடாகும்.

தமிழ்க் கனடியரில் தமிழீழத்தவருடன் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறு தொகையினரும் அடங்குவர் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்க் கனடியரிற் பெரும்பான்மையோரின் சமயம் சைவ சமயமாகும்.

நாடு புதிது. நாட்டின் மொழி ஆங்கிலமும் பிரெஞ்சும். கலாச்சாரம் புதிது. வாழ்வது கிறித்துவச் சூழலில். இந் நிலைமைகளில் சொந்தச் சமயத்தை வளர்ப்பது மிகுந்த சிரமமாக இருக்கும் என்றும் அதனாற் சைவ நடவடிக்கைகள் குன்றலாம் என்றும் பலர் கருத நேர்ந்தது. அவ்வித கருத்துக்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக, கடுங் குளிரிலும் கனடாவிற் சைவம் தழைத்தோங்கும் வேகம் வியப்பை ஊட்டுகின்றது.

---

1. Census Canada 1986, 1996: Population by mother tongue.

# 4
# கோயில்கள்

ஊருக்குச் சிறப்புத் தருவது கோயில். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது உலக நீதி. நல்ல காலம் 'கோயில் இல்லா ஊரில் குடியேற வேண்டாம்' என்று உலகநாதர் கூறவில்லை. குடியேறுவது என்பது ஒன்று குடியிருப்பது என்பது இன்னொன்று. கனடா போன்ற ஒரு பெரிய நாட்டில் குடியேறிய பின்னர்தானே எந்த ஊரில் இருப்பது என்பதைத் தீர்மானிக்க முடியும்.

சமய வளர்ச்சிக்குக் கோயில்கள் இன்றியமையாதவை. இறைவழிபாட்டுக்கும் கோயிலே ஏற்ற இடமாகும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது அவ்வைப் பிராட்டியாரின் கொன்றை வேந்தன். இறைவன் இருக்கும் இடம் கோயிலே என்பதை வலியுறுத்தும் சம்பவம் ஒன்று, 'மாசிலா மரபில் வந்த வள்ளல்' நம்பியாரூரர் புராணத்தில் வருகின்றது.

திருமணக் கோலத்தில் இருந்த தவ வேந்தராய சுந்தரரைத் தடுத்து ஆட்கொள்ள இறைவன் திருவுள்ளம் கொண்டார். அந்தணர் கோலந் தாங்கித் திருமணப் பந்தருள் சென்றார். ஆவணம் காட்டிச் சுந்தரர் தனக்குப் பரம்பரை அடிமையென வழக்காடினார். அந்த வேளை நியாயமான ஒரு கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. 'உமக்கு இவ்வூரில் வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக' என்று அவையில் இருந்த மறையவர் வினாவினர். அதற்கு அனைவரையும் அழைத்துச் சென்று தாம் இருக்கும் இடம் கோயிலே என்று காட்டி அதற்குள் மறைந்தருளினார் அந்தணர் வேடத்தில் வந்த புண்ணிய முனிவர்.

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை
ஒருவரும் அறியீ ராகில் போதும் என்றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர் குழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருள் துறையே புக்கார் கண்டிலா் திகைத்து நின்றார்.

இவ்விதம் சேக்கிழார் பெருமான் தெய்வத் தமிழ் நூலாம் திருத்தொண்டர் புராணத்தின் முதற் சருக்கத்திலேயே இறைவன் இருக்கும் இடம் திருக்கோயிலே என்பதனை இறைவன் வாயிலாகவே எம்மெல்லோருக்கும் உணர்த்திச் செல்கின்றார்.


இந்த உண்மையைக் கனடியச் சைவப்பெருமக்களும் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள் என்பது அவர்கள் மேற்கொண்டுள்ள ஆலய அமைப்பு முயற்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

## ஒன்ராறியோ


ஒன்ராறியோ மாகாணம் தமிழர் அதிகம் வாழும் மாநிலமாக விளங்குகின்றது. தமிழர் பெருந்தொகையில் இங்கு குடியேறுவதற்கு முன்னதாகவே திருவாளர்கள் K. வெங்கட்டராமன், K.S. சக்தி, N. சிவலிங்கம், M. கோடீஸ்வரன், சண்முகதாஸ், G. கிருஷ்ணன் ஆகியோரின் நன்முயற்சியால் கோயில் ஒன்றினைக் கட்டும் நோக்குடன் '**கனடா இந்து ஆலய சபை**' என்னும் பெயரில் ஓர் அமைப்பு 1973ல் பதிவு செய்யப்பட்டிருந்தது. கனடாவின் சைவ சமய வளர்ச்சி இச் சபையின் தோற்றத்துடனேயே ஆரம்பமாகியது என்பது கவனிக்கத் தக்கது.

எனினும் தமிழீழத்தவர் வருகையின் பின்னரே இச் சபையின் கோயில் கட்டும் தொண்டு துரிதம் பெற்றது. இதனை ஆலய சபையின் பின்வரும் கூற்று ஒன்று தெளிவுபடுத்துகின்றது:

"For about 10 years not much progress happened due to various reasons. The membership kept the idea of the temple alive with



இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயில்
மாதிரி வரை படம்



மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயில்

patient planning and ardent praying. In the early eighties, there was a surge in the Hindu population in Metro area, with Sri Lankan Tamils, mostly devout Hindus arriving in Canada. After much search, a land was bought for $158,000 in 1983." [1]

சைவத் தமிழரின் வருகையைத் தொடர்ந்து 1983ல் இறிச்மண் ஹில் என்னும் இடத்தில் காணி வாங்கப்பட்டது. 1984ல் தற்காலிக கட்டிடத்தில் பிள்ளையார் சிலை பிரதிட்டை வைபவம் நடைபெற்றது. 1988ல் கோயிற் கட்டிட வேலைகள் தொடங்கலாயின. பிள்ளையார் கோயில் என்று இதனை நம்மவர்கள் அழைத்தாலும் முருகனும் விஷ்ணுவுமே இங்கு மூல மூர்த்திகள். இம் மூர்த்திகளின் கோயில் விமான கும்பாபிடேகம் 1992 ஆகஸ்ட் மாதத்தில் நடந்தேறியது. இம் மூர்த்திகளுடன் மொத்தமாக 14 தெய்வங்கள் தொடர்ந்து இங்கு பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. வட அமெரிக்காவிலேயே மிகப் பெரிய கோயிலாக இது இருப்பதால் மக்கள் இதனைப் பெரிய கோயில் என அழைக்கலாயினர்.

நாளடைவில் சைவ மக்கள் தொகை அதிகரிக்க மேலும் பல கோயில்கள் எழலாயின.

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

என்று பாடினார் அப்பர் பெருமான். ரொறன்ரோ 'திரு' என்ற சொல்லுக்கு ஏற்ற வகையில் அழகும் சுத்தமும் கல்வியும் செல்வமும் பூரிப்பும் பொலிவும் தெய்வத்தன்மை பொருந்திய மக்களும் நிறைந்த மாநகரமாகவே திகழ்கின்றது. எனினும் தமிழர்கள் தாம் வாழும் பகுதிகளில் தமது தெய்வங்களுக்குக் கோயில் இல்லாத காரணத்தால் அவற்றைத் 'திருவில்'



வல்மொறின் ஆலய உற்சவம்



வல்மொறின் ஆலய உற்சவத்தில் பறவைக்காவடி

ஊர்களாகவே கருதினர். கோயில் திருப்பணிகளிலே தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். இதன் விளைவாக ஒன்ராறியோவிலும் தமிழர் வாழும் பிற மாநிலங்களிலும் பல இடங்கள் திரு மிகுந்த ஊர்களாக மாறியுள்ளன.

இன்று, ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டும் மொத்தம் பதினைந்து சைவம் சார்ந்த கோயில்கள் உள்ளன. அவை இரிச்மண் ஹில் பிள்ளையார், கனடா கந்தசுவாமி, ஸ்காபரோ துர்க்கை அம்மன், ரொறன்ரோ துர்க்கை அம்மன், ஐயப்ப சுவாமி, சத்தி துர்க்கா தேவி, மிசிசாகா துர்க்கை அம்மன், மீனாட்சி அம்மன், நாகபூசனி அம்மன், கிப்ளிங் சிவன், மிசிசாகா முத்துமாரி அம்பாள், வெஸ்ரன் சிவா – விஷ்ணு, வெஸ்ரன் திருச்செந்தூர் முருகன், வரசித்தி விநாயகர் கோயில்களாகும். இவற்றில் எட்டுக் கோயில்கள் ரொறன்ரோ மாநகரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒட்டாவாவில் கால்டன் என்னும் இடத்தில் வட இந்திய மக்களால் 1985 ஜுன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் படிப்படியாகக் கட்டி முடிக்கப் பட்ட இந்துக் கோயில் ஒன்று உள்ளது. வைணவம் போற்றும் தெய்வங்களுடன் விநாயகர், சிவன் முதலாய மூர்த்திகளும் இங்கு உள்ளன. ஒட்டாவாவில் வாழும் சைவத் தமிழர்கள் இக் கோயிலிலேயே வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

## கியூபெக்

மொன்றியல் வாழ் சைவ மக்கள் சிலர் 1984ஆம் ஆண்டு திரு. சிறீரங்கநாதையர் தலைமையில் கூடி அங்குள்ள சைவ மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தற்பொருட்டு மேற்கொண்ட முயற்சியின் பயனாக கியூபெக் சைவ மகாசபை(1985) உதயமாகியது. இது 1986 பங்குனி 11ஆம் திகதி கியூபெக் மாகாண அரசினால் முறைப்படி பதிவு செய்யப்பட்டது.[2] இச் சபை திருமுருகனுக்கு டொலாட் டெசமோ நகரில் 72,000 சதுர அடி கொண்ட திருவிடத்தில் கோயில் ஒன்றைக் கட்டி முடித்துள்ளது. இதன் குட முழுக்கு 12. 11. 1995ல் நடைபெற்றது.

மொன்றியலில் ஸ்ரீ இராஜாராம் சண்முகரத்தின சர்மா அவர்கள்



கனடா ஸ்ரீ ஐயப்ப சுவாமி

துர்க்கை அம்மன் கோயில் ஒன்றைத் தற்காலிகமாக ஆரம்பித்தார்கள். பின்னர், திரு. N. ஜகன் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட துர்க்கை அம்மன் ஆலய சபை துர்க்கை அம்மனுக்கு கோயில் அமைக்கும் திருப்பணியை 1994ஆம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளது.

மொன்றியல் மாநகருக்கு வடக்கே, லொரன்சியன் மலைத் தொடரில் உள்ள வால்மொறீன் என்னும் இடத்தில் இமாலய ஜோதி சிவானந்த மகரிஷியின் சிரேட்ட சீடர்களின் ஒருவரான சுவாமி விஷ்ணு தேவானந்தர் சிவானந்த ஆச்சிரமம் ஒன்றை அமைத்துள்ளார். இங்கு கந்தசுவாமியினதும் ஐயப்பசுவாமியினதும் விக்கிரகங்கள் 11. 07. 1993ல் பிரதிட்டை செய்யப்பட்டன. மேலைக் கதிர்காமம் என்று இத்தலத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆலயத்தைச் சுற்றியுள்ள காட்டைத் திருத்தித் தேரோடும் வீதி அமைக்கவும் மலை அடிவாரத்திலிருந்து ஆலயத்துக்கு 108 படிகள் கட்டவும் குளிர் காலத்தில் ஆலயத்துக்குச் செல்ல மின்கம்பித் தூக்குவண்டி ஒழுங்குகள் செய்யவும் திட்டமிடப் பட்டிருக்கின்றது.

1999 ஏப்பிரல் மாதத்தில் மொன்றியலில் உள்ள சோவே பகுதியில் கற்பகப் பிள்ளையார் கோயில் ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.


## அல்பேட்டா

அல்பேட்டா மாகாணத்தின் தலைநகரான எட்மண்டனில் அல்பேட்டா மகா கணபதி சங்கம் ஒன்று 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் எட்மண்டன் நகரத்தில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைப்பதாகும். இத் திருப்பணிக்கு வித்திட்டவர் ஹவாயில் உள்ள உலக இந்து அறநிலையக் காவலரும் ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் சீடருமாகிய அமெரிக்கர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் ஆவர். இவர் தமது கனடியச் சீடர்களாகிய அரன்வேலர், வேலன் ஆகிய இருவரிடமும் விநாயர் விக்கிரகம் ஒன்றைக் கொடுத்து, கனடாவில் அதற்கு ஓர் ஆலயம் அமைக்குமாறு பணித்தார். அவர்கள் எட்மண்டன் நகருக்குச் சென்று அங்குள்ள சைவப் பெரியார்களுடன் சேர்ந்து விநாயகப் பெருமானுக்கு கோயில் கட்டும் நோக்குடன் அமைக்கப் பெற்றதே மகாகணபதி சங்கம் ஆகும்.


ஹவாயிலிருந்து கொண்டுவந்த விநாயகர் சிலையை வாடகைக்குப் பெற்ற ஒரு வீட்டில் பிரதிட்டை செய்து சில ஆண்டுகள் வழிபட்டு வந்தனர். பின்பு மகாகணபதி சங்கம்



ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர்



ஸ்காபரோ ஸ்ரீ துர்க்கை அம்மன்



அல்பேட்டா மகா கணபதி ஆலயம்

காணி ஒன்றை வாங்கி அதில் விநாயகப் பெருமானுக்குக் கோயிலை அமைக்கும் பணியில் ஈடுபட்டது. இதன் குடமுழுக்கு 2000 ஆண்டு யூலாய் 7ஆம் திகதி நடைபெற்றது.

அரன்வேலரும் வேலனும் பிறப்பால் வெள்ளையர். வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த ஈடுபாட்டால் அவர்கள் சிவநெறியைத் தழுவித் தமது பெயர்களையும் சிவ சம்பந்த மாக்கியவர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஆக, அல்பேட்டா மாகாணத்தில் சைவ சமய வளர்ச்சிக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்கள் வெள்ளைக்காரச் சைவர்களாவர்.

கல்கரியிலும் இந்துக்கோயில் ஒன்று உள்ளது. இதனை ஸ்ரீ முருகன். சபையினர் நிர்வகித்து வருகின்றனர்.

## பிரிட்டிஷ் கொலம்பியா

பிரிட்டிஷ் கொலம்பியாவில் பேனாபி நகரத்தில் ஸ்ரீதுர்க்காதேவி ஆலயமும் இரிச்மண் நகரத்தில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலும் ஸ்ரீ முருகன் கோயிலும் உள்ளன.

---

1. Hindu Temple Society of Canada, Maha Vimana Kumbabishekam, Souvenir Issue, 1992

2. அருள்மிகு திருமுருகன் கோயில், குடமுழுக்கு விழா மலர், 1995

# 5

# கோயில்களின் சமூகப் பணிகள்

பல கோயில்கள் நித்திய நைமித்திய பூசைகள், உற்சவங்கள், அலங்காரத் திருவிழாக்கள் என்பவற்றோடு மட்டும் நின்றுவிடாது, சமூக சேவைகளிலும் ஈடுபடத்தொடங்கியுள்ளன. ஆரம்ப காலங்களில் கோயில் கட்டும் பணிகளில் முழுக் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருந்ததால் சமூகப் பணிகளைக் கோயில் நிர்வாகங்கள் அதிகம் செய்ய முடியவில்லை. இன்று அந்த நிலைமை ஓரளவுக்கு மாற்றம் பெற்றுள்ளது.

இிச்மண் பிள்ளையார் கோயில் தமிழீழத்தில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றது. அண்மைக்காலத்திலிருந்து கலியாண மண்டபத்தைச் சமய விழாக்களுக்கும் பிற சமூக நிகழ்ச்சிகளுக்கும் இலவசமாகக் கொடுத்துதவவும் தொடங்கியுள்ளது. கனடாவில் நடைபெற்ற இரு பெரும் சைவ மாநாடுகளுக்கு இக் கோயில் ஆதரவளித்து, சமய அறிவைப் பரப்ப உதவியிருக்கின்றது.

கனடாக் கந்தசுவாமி கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை ஏழு மணி தொடக்கம் எட்டு மணிவரையும் பக்திப்பாடல் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவற்றின் பயன்பாடுபற்றிக் கலாநிதி ச. முத்துலிங்கம் அவர்கள் 'பூசைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆலயத்திற் கூடியிருக்கும் அடியார்கள் தமக்குள் அரட்டை அடிப்பதைத் தவிர்ப்பதற்காகவும் அதேவேளை தெய்வங்களின்மேல் பாடப்பட்ட பக்திப்பாடல்களைக் கேட்டு அவர்கள் தமது புலன்களை நல்ல வழிகளில் திசை

திருப்புமாறும் ஆலய நிர்வாகத்தினர் இந்த இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். தரப்பட்ட ஒரு மணி நேரத்தில் நமது இசைக்கலைஞரும் இசைபயிலும் மாணவரும் தமது திறன்களை விருத்தி செய்ய இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்று குறிப்பிடுகின்றார்'

ஸ்ரீ ஐயப்பன் ஆலயம் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையினால் 1996 ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பிக்கபெற்ற சிறுவர் பாடசாலையைச் சிறப்புற நடத்தி வருகின்றது. நூற்றுக்கும் அதிகமான மாணவர் தமிழையும் சமயத்தையும் இலவசமாக இப் பாடசாலையில் கற்றுவருகின்றனர். மேலும், தொண்டர் படை ஒன்றினை உருவாக்குதல், ஊனமுற்றோர், முதியோர் போன்றவருக்கு உதவுதல், கலைஞர்களை ஊக்குவித்தல் போன்ற பல சமூக சேவைகளைச் செய்யவும் இவ் வாலயம் திட்டமிட்டுள்ளது.

மொன்றியலில் உள்ள துர்க்கை அம்மன் கோயிலில் வாராந்த சமய வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கியூபெக் மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயிலில் கலைநெறிக் கல்விக் கழகம் தமிழும் சமயமும் கற்பித்து வருகின்றது. ஆண்டுதோறும் 'கோபுரம்' என்னும் திருநாமத்திற் கலைவிழாவும் இக்கோயிலில் நடாத்தப்படுகின்றது.

கல்விப் பணியில் ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயமும் காலடி எடுத்து வைத்துள்ளது. ஆரம்ப கட்டமாக இசை, வாத்திய வகுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. 'கனடா இந்து' என்னும் பருவகாலச் சஞ்சிகை ஒன்றையும் இவ்வாலயம் வெளியிட்டு வருகின்றது.

பொதுவாக எல்லாக் கோயில்களுமே நூல் வெளியீடுகள், தமிழ் விழாக்கள், மாநாடுகள், குரு பூசைகள் என்பவற்றை நடத்தப் பல சமூக சமய தாபனங்களுக்கு மண்டபங்களைக் கொடுத்தும் அன்னதானங்கள் செய்ய உதவியும் ஒத்துழைத்து வருகின்றன.

எமது சமயம் சமுதாயப் பணியுடன் இணைந்ததொன்று. சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்கள் ஆற்றிய சமுதாயப் பணிகளை பெரிய புராணத்திலே சிறப்புற விளக்கிக் காட்டுகின்றார். நாவுக்கரசர்

பெயரால் 'படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்கள் செய்த' அப்பூதியடிகள், அடியவர்க்கு அமுது செய்வித்து ஆடைகளும் உதவிய செல்வந்தர் அமர்நீதி நாயனார், அடியார்க்கு அமுதும் பொருளும் தந்த சிறப்புலி நாயனார், பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப் பணிசெய்த தண்டியடிகள், அடியார்களின் துணி தோய்த்து உலர்த்திய திருக்குறிப்புத் தொண்ட நாயனார், உழவாரங் கொண்டு பெருந் தொண்டு புரிந்த திருநாவுக்கரசு நாயனார், சிவனடியார்களுக்குத் துணி வழங்கி மகிழ்ந்த நேச நாயனார் போன்றோரது வரலாறுகள் அடியார்கள் ஆற்றிய சமுதாயப் பணிகளை எடுத்து விளக்குகின்றன.

தமிழ் நாட்டிற் பல ஆதினங்களும் மடங்களும் பலவகையான சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதை யாவரும் அறிவர். ஈழநாட்டில் துர்க்காதுரந்தரி பண்டிதை, கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் அமெரிக்காவில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளும் சமயப் பணியுடன் பொதுப் பணிகள் பலவற்றிலும் ஈடுபட்டுச் சமுதாய நலனைப் பேணி வருகின்றனர்.

கனடாவிற் பிற சமயத் தாபனங்கள் செய்துவரும் சமூகப் பணிகள் அளப்பரியன. கத்தோலிக்க நிறுவனங்களும் இரட்சணிய சேனையும் நல்லுதவி இயக்கமும் (Goodwill) ஆற்றிவரும் பணிகள் உலகளாவி நிற்பன. குறிப்பாக, கத்தோலிக்க நிறுவனங்கள் அகதிகளுக்குச் செய்துவரும் பணிகளாற் சைவத் தமிழரும் பயனடைந்துள்ளனர்.

இத் தாபனங்களைப் போன்று பரந்த பணிகளைச் சைவக் கோயில் நிர்வாகங்களும் செய்ய வேண்டும் என்று எம்மவரிற் பலர் எதிர்பார்க்கின்றனர். வெளிப்படையாக இதுபற்றிக் குரல் கொடுத்தும் வருகின்றனர்.

அந்தரப்பட்டு வரும் தமிழ் அகதிகளுக்குத் தற்காலிக புகலிடம் வழங்குதல், அரச உதவிகளைப் பெற உதவுதல், ஆலோசனைச் சேவை நடத்துதல், சட்டத்தரணிகளை ஒழுங்குசெய்து

கொடுத்தல், குடும்பத் தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தல், உளவியற் சிக்கல்களால் வருந்துபவரை வழிப்படுத்தல், சமுதாய ஊழல்களையும் குற்றச் செயல்களையும் குறைக்கும் அல்லது முற்றாக நீக்கும் முயற்சிகளைச் செய்தல் போன்றனவும் பிறவுமாகிய பாரிய பணிகளில் எமது கோயில்கள் ஈடுபடல் வேண்டும் என்னும் எதிர்பார்ப்பு நியாயபூர்வமானது; காலத்துக்கும் புதிய சூழலுக்கும் ஏற்றது. ஆயின் அத்தகைய பெருந் தொண்டுகளிற் கோயில்கள் தாபன ரீதியில் இப்பொழுது ஈடுபட முடியாத நிலையில் இருப்பதையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இதற்கான முக்கிய காரணங்களாக இரண்டினைக் கூறலாம். ஒன்று, கோயில்கள் அமைப்புரீதியாக வளரும் நிலையில் இருக்கும் தன்மை. மற்றையது, போதிய பொருளாதார வசதி இன்மை. கோயில் நிர்வாகங்கள் குறிப்பாகக் கோயில்களைக் கட்டி முடிப்பதிலேயே இப்பொழுதெல்லாம் கவனத்தைச் செலுத்தி வருகின்றன. இப்பாரிய திருப்பணி வேலைகள் முடிவுறும் கால கட்டங்களில் இப்பொழுது செய்து வருவதிலும் அதிக சமுதாயப் பணிகளை இவை மேற்கொள்ளும் என்பது உறுதி.

---

1. கலாநிதி ச. முத்துலிங்கம், 'கனடாக் கந்தசாமி கோயில் இசை நிகழ்ச்சி ஒரு விமர்சனம்' – நம்நாடு, யூலாய் 15, 1999, பக். 24

# 6

# சைவம் வளர்க்கும் மன்றங்கள்

கோயில் அமைத்து வழிபடுவதுடன் நின்றுவிடாது சைவத் தமிழ் மக்கள் பல மன்றங்களை அமைத்து, அவற்றின் ஊடாகவும் சமயத் தொண்டுகளைச் செய்து வருகின்றனர்.

கியூபெக் சைவ மகாசபை, கனடா தமிழ்க் கலாச்சாரச் சங்கம், கனடா இந்து கலாச்சார மன்றம், ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, கனடா இந்து மாமன்றம், வேதாந்த ஞான மன்றம், கனடா சைவ சித்தாந்த மன்றம், கனடா சிவதொண்டன் நிலையம், ஆதி அருள்நெறி மன்றம் முதலாய அமைப்புகள் கனடாவில் சைவ சமயத்தையும் சைவப் பாரம்பரியங்களையும் வளர்க்கும் நோக்குடன் பலவகையான பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.


## கியூபெக் சைவ மகாசபை

1985ல் திரு. சிறீரங்கநாதக் குருக்கள், திரு. செல்லையா இராசரத்தினம், திரு. அப்புத்துரை கனகலிங்கம் போன்ற பெரியார்களின் முயற்சியால் இச்சபை நிறுவப்பெற்றது. திருமுருகனுக்கு டொலாட் டெசமோ நகரில் கோயில் கட்டி முடித்தமை இதன் தலையாய சாதனை.

அத்துடன் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சமய நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் சொற்பொழிவு போன்றவற்றை ஒழுங்கு செய்வதுடன் சமய வகுப்பு, பண்ணிசைப் போட்டி என்பவற்றையும் நடத்தி வருகின்றது. மொன்றியலில் இச் சபை நடத்தும் பொங்கல் விழா பெயர் பெற்றது.



சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுடன் இந்து சமயப் பேரவை உறுப்பினர்கள்



இந்து சமயப் பேரவை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்கு 30. 07. 94ல் எடுத்த பாராட்டு விழா

9. 7. 94, 10. 7. 94 ஆகிய இரு நாட்களிலும் நான்காவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டை நடத்திய சிறப்பும் கியூபெக் சைவ மகாசபைக்கு உண்டு.

## கனடா தமிழ்க் கலாச்சாரச் சங்கம்

1989ல் அமரர் திரு. எஸ். ஏ. சிவபாதம், திருவாளர்கள் க. தெ. சண்முகராசா, சிவாஜி மகேந்திரா, T. இலிங்கராஜா, K.V. செல்வராஜா போன்ற மொன்றியல் ஆர்வலர்களால் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சமயவழி நின்று மக்களை நன்மக்களாக்கும் நெறிமுறைகளை அறிவுறுத்துவதும் மொழி, கலை, கலாச்சாரப் பாரம்பரியங்களை வளர்ப்பதும் இதன் நோக்கம். பல ஆண்டுகள் வாணி விழாவைச் சிறப்புற மொன்றியலில் நடத்தி அறிஞர்களையும் கலைஞர்களையும் இச் சங்கம் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கனடா இந்து கலாச்சார மன்றம்

கனடாவாழ் இந்து மதத்தவர்களின் மத்தியில் சமய விழிப்புணர்வையும் சமய நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும் என்ற பேரவாக் காரணமாக முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், திரு. சி. செகராஜசிங்கம் ஆகிய சைவப் பெரியார்களின் முயற்சியால் 1992ல் உருவாக்கப்பட்டது.

சமய குரவர்களும் சிவனடியார்களும் பாடிப் போந்த தோத்திரங்கள் கனடிய மண்ணில் வாழும் சைவ மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்னும் பெருவிருப்பினால் ‘சைவத் திருமுறைத் திரட்டு’ என்னும் தொகுப்பினை 1994ல் இம் மன்றம் வெளியிட்டது.

பொங்கல் விழாவை ரொறன்ரோவில் முதன்முதலாக நல்லமுறையிற் கொண்டாடிய பெயரும் இதற்கு உண்டு. கலாச்சாரம் சார்ந்த கருத்தரங்குகளையும் அவ்வப்போது நடத்தி வருகின்றது.

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

கனடாவில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்னும் நோக்குடன் 1994ஆம் ஆண்டு யூலாய் மாதம் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. சமய குரவர்கள், சிவயோக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோரின் குருபூசைகளையும் கூட்டு வழிபாடுகளையும் நடத்தி வருகின்றது.

பல தமிழ், சமய நூல்களை பேரவை வெளியிட்டுள்ளது. ஆத்மஜோதி அவர்கள் அமரரானபின் அவரது நினைவு தினத்தை ஆண்டு தோறும் நடத்தி வருகின்றது. கைதடி சிறுவர் இல்லத்துக்குப் பெருமளவில் உதவியிருக்கின்றது. 1999ல் லாண்ஸ்டவுண் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆறுமுக நாவலருக்கு முழுநாள் விழா வொன்றை எடுத்துத் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய பல பெரியார்களைக் கௌரவித்திருக்கின்றது. அண்மைக்காலந் தொடங்கிக் கனடா கந்தசாமி கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் திருமுறை முற்றோதலை நடத்தி வருகின்றனர். இந்து சமயப் பேரவைத் தொண்டர் திரு. சிவமுத்துலிங்கம் முன்னின்று நடத்தி வருகின்றார். 'ஆத்மஜோதி' சஞ்சிகையை இந்துசமயப் பேரவை வெளியிடத் தொடங்கியுள்ளது.

## கனடா இந்து மாமன்றம்

1994ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பண்டிதர் வீ. வ. நம்பி, திரு. தம்பையா ஸ்ரீபதி, திரு. கு. புனிதவேல் முதலிய பெருமக்களால் இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. சமய, கலாச்சார விழாக்களை எடுத்தலும் கல்விச்சேவை சமூக சேவை போன்றவற்றை நடத்துதலும் இதன் பிரதான நோக்கங்கள். இந் நோக்கங்களை நிறைவேற்றுதற் பொருட்டுப் பின்வரும் பணிகளில் இம் மன்றம் ஈடுபட்டு வருகின்றது:

- 'சைவ நீதி' என்னும் சஞ்சிகையை வெளியிடுதல்,
- ஞாயிற்றுக்கிழமையில் சமயம், சங்கீதம், பரத நாட்டியம் ஆகிய வகுப்புகளை நடத்துதல்,

- கலை விழாக்களையும் கண்காட்சிகளையும் கருத்தரங்கங்களையும் ஒழுங்கு செய்தல்,
- குரு பூசைகளை நடத்துதல்.

இவற்றோடு 7வது உலகச் சைவ மாநாட்டை 1999ஆம் ஆண்டு யூலாய் 30, 31, ஆகஸ்ட் 01 ஆகிய தினங்களில் முன்னின்று நடத்திய பெருமையும் கனடா இந்து மாமன்றத்துக்கு உரியது.

## வேதாந்த ஞான மன்றம்

திரு. விபுலானந்தா (அடியார்), திரு. க. தம்பிராசா, திரு. சி. கருணானந்தன் ஆகியோர் முன்னின்று 1995ஆம் ஆண்டு முற்பகுதியில் அமைத்த கனடா ஞான மன்றம் பிற்பாடு வேதாந்த ஞான மன்றம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

தமிழ். சமய வகுப்புகளைப் பல நிலையங்களில் நடத்தி வருகின்றது. 600 பிள்ளைகள் தற்சமயம் இம் மன்றத்தின்



வேதாந்த ஞானமன்றச் செயலகத் திறப்பு விழாவில்
சுவாமி சச்சிதானந்த மகரிஷி அவர்கள்

பாடசாலையிற் கல்வி கற்கின்றார்கள். வளர்ந்தவர்களுக்கு யோகாசனப் பயிற்சியை அளித்து வருவதோடு புதன்கிழமைகளில் சத்சங்க வழிபாட்டுக்கும் வழிவகை செய்து வருகின்றது.

இம் மன்றம் வெளியிட்டு இடையில் நின்றுபோன 'மதம்' என்ற பத்திரிகை மீண்டும் வெளி வரத் தொடங்கியுள்ளது.



வேதாந்த ஞானமன்ற வகுப்பில்
மாணவர் தியானம் பயில்கின்றனர்

## கனடா சைவ சித்தாந்த மன்றம்

திருவாளர்கள் தி. விசுவலிங்கம், ஈ. சண்முகநாதன், ந. ஜெகநாதன், வை. இரஞ்சன், சி. ஸ்கந்தகுமார், பொ. புவனேந்திரன், வை. இராஜேஸ்வரன், சி. மாணிக்கத் தியாகராசா, க. மார்க்கண்டு ஆகிய சைவப் பெருமக்களால் 1995ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இம் மன்றம் உருவாக்கப்பெற்றது.

சைவத் தமிழ் மக்களிடையே சைவ சமய அறிவு, சமய ஆசார அனுட்டானங்கள், ஒழுக்க நெறிகள் என்பவற்றை

வளர்த்தல், இளம் சந்ததியினரிடையே சைவ சமயம், தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தல் முதலியன இதன் பிரதான நோக்கங்கள்.

கூட்டு வழிபாடுகளையும் நாயன்மார்கள் மற்றும் அருளாளர்களின் குருபூசைகளையும் ஒழுங்கு செய்வதோடு ஆண்டுதோறும் திருவருட்செல்வர் விழா, திருவாசக விழா என்னும் இரு பெரு விழாக்களையும் நடத்தி வருகின்றது. சைவம், தமிழ், பண்ணிசை மற்றும் நுண்கலைகளை மாணவர்களுக்குப் புகட்டுகின்றது.

இலங்கை விவேகானந்த சபை நடத்தும் சைவ சமயப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றச் செய்கின்றது. 'அன்புநெறி' என்னும் திங்கள் இதழை 1996 முதல் வெளியிட்டு வருகின்றது.




1998ல் சைவ சித்தாந்த மன்றம் நடத்திய பண்ணிசைக்கச்சேரி விழாவில் மன்ற மாணவர் பண்ணிசை பாடுகின்றனர்



சைவசிதாந்த மன்றம் நடத்திய திருவருட்செல்வர் விழா 1999

## கனடா சிவதொண்டன் நிலையம்

திரு. சின்னையா சிவனேசன், திரு. சின்னப்பு நவரத்தினராசா, திரு. து. நவரத்தினம், திரு. ச. திருநடராசா போன்ற தொண்டர்களின் ஆர்வத்தால் 1996 ஏப்பிரலில் இந் நிலையம் உதயமாயிற்று. ஈழத்துச் சிவயோக சுவாமிகளை முன் வைத்துக் கனடாவில் சைவத்தை வளர்த்து வருவதோடு சுவாமிகளின் 'நற்சிந்தனை' களையும் இது பரப்பி வருகின்றது. இதன் காப்பாளராக சிவயோகசுவாமிகளின் பிரதம சீடர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் விளங்குகின்றார்.

1997ல் யோகர் சுவாமிகளின் 125ஆவது பிறந்த தினத்தைச் சிவதொண்டன் நிலையம் பல இடங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது.

ஒவ்வொரு மாதமும் யோகர் சுவாமிகள் பிறந்த ஆயிலிய நட்சத்திரத்தில் குரு பூசை செய்து கூட்டு வழிபாட்டில் ஈடுபடுவதோடு ஸ்காபரோவில் உள்ள வோபேன் கல்லூரியில் தமிழ், சமயம், பண்ணிசை ஆகிய பாடங்களில் வகுப்புகளையும் வார இறுதியில் நடத்தி வருகின்றது. வருடா வருடம் யோகர் சுவாமிகள் நினைவு தினத்தையும் சரஸ்வதி பூசையையும் கொண்டாடி வருகின்றது.




சிவயோக சுவாமிகளின் 125ஆவது ஜெயந்தி விழாவில்
சிவதொண்டன் நிலையச் செயலாளர் திரு. சின்னையா சிவநேசன்

## ஆதி அருள்நெறி மன்றம்

டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம், புலவர் க. சிவானந்தன் ஆகியோரால் பல தமிழ், சைவ அபிமானிகளின் ஆதரவுடன் 1996ல் இம் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. சமய, தமிழ்க் கல்வியை இளம் சந்ததியினருக்குப் புகட்டுதல் இம் மன்றத்தின் தலையாய நோக்கம். நான்கு நிலையங்களில் இப் பாடங்கள் தற்போது கற்பிக்கப்படுகின்றன.

அரசினர் பாடசாலைகளில் 13ஆம் வகுப்பில் அதிக புள்ளிகளை ஈட்டும் தமிழ் மாணவருக்கு ஆண்டுதோறும் பொற்கிழி (புலமைப் பரிசில்) வழங்கும் திட்டம் ஒன்றையும் இம் மன்றம் செயற்படுத்துகின்றது. இதுவரை இரு மாணவர் ஆதி அருள்நெறி மன்றத்தின் பொற்கிழியைப் பெற்றுள்ளனர்.

பொங்கல் விழா, சரஸ்வதி பூசை, ஆடி அமாவாசை விரத அனுட்டானம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளாலும் இம் மன்றம் அருள் ஒளியைப் பரப்பி வருகின்றது. 'தமிழ் மகள்' இம் மன்றம் வெளியிட்டுவரும் மாதப் பத்திரிகையாகும்.



ஆதி அருள்நெறி மன்றத்தின் புதுவருடவிழாவில்
டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம் அவர்கள் கைவிசேடம் வழங்கல்

# 7

# அந்தணர் பணிகள்

1984ல் கனடா இந்து ஆலய சபை பிள்ளையார் கோயிலுக்கு அந்தணர் ஒருவரை இந்தியாவிலிருந்து வரவழைக்க வேண்டிய நிலை இருந்தது.

ஆனாற் படிப்படியாக தமிழீழத்திலிருந்து அந்தணர்கள் கனடாவிற் குடியேறியதைத் தொடர்ந்து கோயில் அர்ச்சகர்களை தமிழ் நாட்டிலிருந்தோ தாய்நாட்டிலிருந்தோ வரவழைக்க வேண்டிய தேவை குறையலாயிற்று.

கனடாவிற் சைவ சமயம் துரித வளர்ச்சி அடைந்து வருவதற்கு அந்தணர்கள் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன.

கோயில்கள் பலவற்றை ஆரம்பிப்பதற்கு அந்தணர்களே முன்னின்று உழைத்திருக்கின்றார்கள். இன்று பெரும்பான்மையான கோயில்கள் சைவப் பெருமக்களால் நிர்வகிக்கப்படுகின்ற போதிலும் ஒருசில அவற்றைத் தாபித்த அந்தணரின் மேற்பார்வையிலேயே இயங்கி வருகின்றன.

பல அந்தணப் பெருமக்கள் சமய அறிவைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். வியாகரண சிரோமணி, சிவாச்சாரிய கலாநிதி பூரண தியாகராஜக் குருக்கள், சிவாகம ஞானபானு சிவஞானச்செல்வக் குருக்கள், சிவத்திரு தியாகராஜக்குருக்கள், சிவத்திரு கண்ணன் குருக்கள் போன்றோரும் மற்றும் சிலரும் சொற்பொழிவுகளாலும் கட்டுரைகளாலும் சமய அறிவைப் பரப்பி வருகின்றனர்.

சிவாச்சாரிய கலாநிதி பூரண தியாகராஜக் குருக்களும் சிவன் கோயில் பிரதம குரு சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகளும் வேதாகம வகுப்புகளும் நடத்தி வருகின்றார்கள். முன்னவர் வேதங்களையும் பின்னவர் ஆகமங்களையும் இங்குள்ள பல அந்தணர்களுக்குக் கற்பித்து, வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த நெறியையும் வளர்த்து வருகின்றார்கள்.

இங்கு நடைபெறும் சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்லாது, விடுதலை உணர்வு விழாக்கள், கலைவிழாக்கள், நூல், ஒலி, ஒளி நாடா வெளியீடுகள், விளையாட்டு வைபவங்கள் போன்றவற்றுக் கெல்லாம் முழு ஆதரவு தருவதோடு பல அந்தணர்கள் நிதியுதவியும் வழங்கி ஊக்குவித்து வருகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக, சைவப் பாரம்பரியங்களைச் சமூகத்தில் வளர்க்க உதவும் சக்திகளாகவும் இவர்கள் விளங்குகின்றனர்.

நிர்வாக விதிகளை அனுசரித்து முழுவதுமாகக் கோயில் கடமைகளையே புரிந்து வருகின்ற அந்தணர்களைத் தவிர ஏனையவர் திருமணம், வீடுகுடி புகுதல், பூப்புனித நீராட்டு விழா முதலாய மங்கலக் கிரியைகளையும் மற்றும் ஒரு சிலர் உத்தரக் கிரியைகளையும் செய்ய உதவுகின்றனர்.

கியூபெக் மாநிலத்தில் சிவத்திரு ஆ. கோவிந்தராஜக் குருக்கள், பிரம்மஸ்ரீ வெங்கடேஸ்வர சர்மா (திருமுருகன் கோயில்), சிவத்திரு பூரண தியாகராஜக் குருக்கள், பிரம்மஸ்ரீ பூரணானந்த சர்மா, பிரம்மஸ்ரீ காமாட்சி பாலச்சந்திரக் குருக்கள், சிவத்திரு கணேசையர், பிரம்மஸ்ரீ சிவகுமார சர்மா, சிவத்திரு வெங்கடேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள், சிவத்திரு நி. பாலச்சந்திர சர்மா ஆகியோர் சமூக மங்கல நிகழ்ச்சிச் சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

ஒன்ராறியோ மாகாணத்திற் சமூகக் கிரியைகளை நடத்த உதவிவருகின்றவர்களின் விவரங்கள் சில பின்வருமாறு:

சிவாகம கிரியா பீடம் – சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரன் குருக்கள் (கண்ணன் குருக்கள்)

ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா – சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
ஸ்ரீகௌரி மங்கள சேவை – சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)
ஸ்ரீ வித்யா பீடம் – சிவஸ்ரீ தியாக முருகானந்த குருக்கள்
ஸ்ரீநிவாஸ் நிலையம் – சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள் (சர்வன் ஐயர்)
பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா (குகன் ஐயர்)
சர்வ மங்களா மங்கள சேவை– சிவஸ்ரீ ராம் சர்வலோகேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீகரன் மங்கள பவ்னம் – சிவஸ்ரீ பொன். பஞ்சாட்சரக் குருக்கள்
சிவசக்தி சமாஜம் – சிவஸ்ரீ இ. மகேஸ்வரக் குருக்கள்
கணபதி கிரியா பவனம் – சிவஸ்ரீ சி. சிவசுப்பிரமணிய ஐயர்
– சிவஸ்ரீ சிவ ஜெயகாந்தக் குருக்கள்
பால சிவவர்த்தினி சுபாலயா – சிவஸ்ரீ பாலஜெகனிவாசக் குருக்கள்
– சிவஸ்ரீ பாலதிருகுணாநந்தக் குருக்கள்
ஸ்ரீ லலிதாம்பாள் வைதீக சமாஜம் – ஸ்ரீ V.B. ஈஸ்வரன் ஐயர்
ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ வைதீக சமாஜம்
–பிரம்மஸ்ரீ வைதீகப் பிரதிஷ்டா பிரவீணா சந்திரமௌலி சாஸ்திரிகள்
அமிர்த மங்கள சேவை – ஸ்ரீ லலிததாச குருக்கள்
ஸ்ரீ கனகாம்பிகை மங்கள பீடம் – ஸ்ரீ சுவாமிநாத ரவிசங்கர குருக்கள் (சங்கர் ஐயர்)
இந்து மத சேவை – சைவ சிவாச்சாரியார் திருஞானசம்பந்தக் குருக்கள்
– சிவஸ்ரீ சித்திராங்கக் குருக்கள்
– சிவஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் (முத்துசாமி குருக்கள்)

# தமிழில் அர்ச்சனை

கோயில்களில் தமிழில் பூசைகளும் அர்ச்சனைகளும் செய்யப்படல் வேண்டும் என்னும் குரல் கனடாவில் சற்று உரக்கவே இந்நாட்களில் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அதற்கு அந்தணர்கள் ஆதரவு அளிப்பதில்லை என்றும் குறை கூறப்பட்டு வருகின்றது.

தமிழ் நாட்டிற் கோயில்களிற் தமிழில் வழிபாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை ஓர் இயக்கமாகவே மறைமலை அடிகளும் அவரைத் தொடர்ந்து குன்றக்குடி அடிகளாரும் பிரசாரம் செய்து வந்தனர். இக் காலத்தில் உலகச் சைவப் பேரவையும் தீந்தமிழ் மொழிமூலம் கோயில்களிற் பக்திநெறியை வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் வேண்டுகோள்களில் ஒன்று பின்வருமாறு:

'அர்ச்சனை பாட்டேயாகும்' என்பது ஆன்றோர் திருவாக்கு. இதனால் பொதுவாகப் பஞ்சபுராணத்துக்குரிய பன்னிரு திருமுறைகளும், குறிப்பாக அப்பர் அருளிய போற்றித் திருத்தாண்டகம், திருக்கைலாயப் பதிகம், மணிவாசகர் அருளிய போற்றித் திருவகவல், அருணகிரிநாதர் திருப்புகழ் முதலியன பெருமளவிற் சைவ ஆலயங்களில் அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.' [1]

இந்த வேண்டுகோளை 1999ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற ஏழாவது உலகச் சைவ மாநாட்டிலும் உலகச் சைவப் பேரவைத் தலைவர் தவத்திரு சிவநந்தி அடிகளாரும் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும் தமது உரைகளின் போதும் விடுத்தனர். இதனை அனுவதித்து 30. 07. 1999 மாலை மிசிசாகாவில் ஏழாவது உலகச் சைவ மாநாட்டையொட்டி நடத்தப்பெற்ற கலைவிழாவில் மிசிசாகா ஜெயதுர்க்கா ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் உரை நிகழ்த்தினார். தமது தந்தையார் ஈழத்தில் குன்றக்குடி அடிகளார் முன்னிலையில் தமிழிற் பூசை நடத்திக் காட்டியவர் என்பதைக் குறிப்பிட்டு, கனடியச் சைவ மக்கள் தயாரெனின் தாமும் தமிழிற் பூசை நடத்தத் தயார் என்று கூறித் தமது ஆதரவைத் தெரிவித்தார். இவர் கனடாவில்

கலாநிதி S. முத்துலிங்கம் அவர்களின் புதல்வன் கலாநிதி சாரங்கன் அவர்களுக்கும் செல்வி நான்சி நயிலோர் அவர்களுக்கும் 03. 04. 1999 அன்று திருமுறைத் திருமணம் செய்து வைத்தவர் என்பதையும் பலர் அறிவர்.

இவரது தம்பியார் சிவத்திரு பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் வரசித்தி விநாயகர் ஆலயத்தில் அடியார்கள் செய்விக்கும் பிறந்ததின, திருமணதின அர்ச்சனைகளைத் தமிழிற் செய்து வருகின்றார்.

கனடா கந்தசுவாமி கோயிலில் 'தமிழில் அர்ச்சனை செய்யப்படும்' என்ற அறிவித்தல் போடப்பட்டிருப்பினும் யாரும் தமிழிற் செய்யும்படி கேட்பதில்லை என்று நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

'பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது போன்ற பெரிய பிரச்சனையா இது? கோயில் நிர்வாகிகள் தமிழில் அர்ச்சனைகளைச் செய்யத் தொடங்கினால் தமிழ் மக்கள் வேண்டாம் என்றா சொல்லப் போகின்றார்கள்?' என்று தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்பதை ஆதரிப்பவர்கள் கேட்கிறார்கள்

தமிழ் மக்கள் இது குறித்து அதிகம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பலருக்கு இராவணன் ஆண்டாலென்ன இராமன் ஆண்டாலென்ன என்கின்ற நிலைதான். சிலருக்குக் கோயிற் பூசைகளைத் தமிழில் நடத்துவதிலும் பிள்ளைகளுக்கு தமிழை புகட்டுவது முக்கியமாகத் தெரிகின்றது. தமிழிற் பூசைகளை நடத்தினாற் பிள்ளைகளுக்கும் தமிழைக் கற்பதற்கு உதவியாக இருக்கும் என்று சொன்னால், பிள்ளைகள் எங்கே கோயிலுக்குச் செல்கின்றார்கள் என்று திருப்பிக் கேட்கிறார்கள்.

எதற்கும் தாய்மொழிப் பற்று இருத்தல் வேண்டும். கோயில்களிலாயினும் வீடுகளிலாயினும் பிற இடங்களிலாயினும் ஆர்வம் இருந்தால் தமிழ் வளரும்.

---

1. மலர்க் களஞ்சியம், சேக்கிழார் உலகப் பெருவிழா, குன்றத்தூர் தமிழகத்தெய்வச் சேக்கிழார் மன்றம், 19994, பக். 68.

# 8

# ‘சரவணாஸ்’ கலைக்கூடத்தின் பணிகள்

அந்தணர் பெருமக்களையடுத்து, கனடாவிற் சைவ சமய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான தொண்டாற்றிவரும் தனிமனிதர் ஒருவர் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். விளம்பரம் விரும்பாது அமைதியான முறையில் திருப்பணிகள் புரிந்துவரும் அவர் வேறு யாருமல்லர், சிற்பக் கலாகேசரி திரு. ச. ஜெயராஜா அவர்கள்தாம்.

திரு. ஜெயராஜா அவர்கள் தாயகத்து மயிலிட்டியிற் பிறந்தவர். தந்தையார் திரு. சரவணமுத்து அவர்களின் பெயரை நிலைநிறுத்தும் ‘சரவணாஸ்’ கலைக்கூடத்தின் மூலம் கனடாவிற் கோயில்கள் பலவற்றுக்குத் தேர்கள், விமானங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை அமைத்துக் கொடுக்கும் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்.

தாயகத்தில் தமது சிறிய தந்தையார் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களின் குரும்பசிட்டி சிற்பக் கூடத்திற் பணியாற்றிப் பல கோயில்களுக்குத் தேர்கள் அமைத்துள்ள அனுபவத்தைப் பெற்றபின் 1978 முதல் தாமே தேர்களை அமைக்கத் தொடங்கினார். மயிலிட்டிப் பிள்ளையார், வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன், வல்வெட்டித்துறை சிவன், ஊரெழு மீனாட்சி அம்மன், மாசியப்பிட்டி மீனாட்சி அம்மன், நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன், காரைநகர் திக்கரை முருகன் பொலிகண்டி உப்புக்கிணற்றடிப் பிள்ளையார், புங்குடுதீவு அரியநாயகம்புலம் பிள்ளையார், புங்குடுதீவு சிவன் ஆகிய



சிற்பக்கலாகேசரி அவர்கள் 1997ல்
இறிச்மண் ஹில் ஆலயத்திற்கு அமைத்த தங்க ரதம்

கோயில்களுக்குச் சித்திரத் தேர்களை அமைத்த பெருமை இவருக்கு உண்டு. செல்வச்சந்நிதி முருகனின் பெயர் பெற்ற பெருந்தேரின் மேல்விமானம், அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் மஞ்சம் ஆகியவற்றை அமைத்தவரும் இவரே.

இத்தகைய சிற்ப, சித்திரத் தேர்க் கலைஞர் 1986ல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தமை தெய்வ சித்தம்போலும். கனடியக் கோயில்கள் தொடர்பான கலைஞர் ஜெயராஜா அவர்களின் சேவையைத் 'தமிழர் தகவல்' சஞ்சிகை பின்வருமாறு பதிவு செய்கின்றது:

'தமது முதலாவது திருப்பணியாக 1987ல் இறிச்மண் ஹில் இந்து ஆலயத்தின் பிள்ளையார், முருகன், பெருமாள், சந்நிதிகளுக்குச் சித்திர வேலைப்பாடமைந்த கதவுகளை உருவாக்கினார். வடஅமெரிக்காவின் மிகப்பெரிய இந்து ஆலயமான மேற்படி ஆலயத்தின் வேலையுடன், வடஅமெரிக்காவின் ஆலயப் பணிகளை ஆரம்பித்தார் கலைஞர். இவரது முதலாவது தேர் நிர்மாணப் பணியும் இந்த ஆலயத்தில்தான் ஆரம்பமானது. 1994ம் ஆண்டு இவ்வாலயத்தின் பிள்ளையார், முருகன் தேர்களை உருவாக்கி அனைவரதும் பாராட்டினைப் பெற்றார்.

1995ஆம் ஆண்டு மொன்றியலில் முருகன் கோயில் அமைக்கும் பணியினை நிறைவு செய்தார். அதேயாண்டில் மொன்றியல் ஸ்ரீதுர்க்கை அம்மனுக்குச் சூரன் அமைத்து அனைவரையும் வியப்பிலாழ்த்தினார். இங்குள்ள ஆலயங்களுக்கு எலி, பாம்பு, மயில், குதிரை, காராம்பசு, யானை, அன்னம், புலி என்று 30க்கும் அதிகமான வாகனங்களை உருவாக்கியுள்ளார்.

1996ஆம் ஆண்டு இவரது சித்திரக் கலைப்பணியின் முக்கியமான ஆண்டு. கனடாவில் தமது முதலாவது சித்திரத்தேரினை மொன்றியல் முருகன் கோவிலுக்கு அமைத்து செப்டம்பர் 14ஆம் நாள் வெள்ளோட்டம் விட்டுக் கனடிய மண்ணில் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார் ஜெயராஜா அவர்கள். அன்றைய தினம் கியுபெக் சைவ மகா சபையினர் வழங்கிய 'சிற்பக் கலை அரசன்' பட்டம் அவருடைய பெயருடன் இணைந்துவிட்டது.

1997ஆம் ஆண்டில் றிச்மன்ட்ஹில் ஆலயத்துக்கு உள்வீதிக்கான தங்க ரதத்தினையும், 1999ல் மிஸிஸாகா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குத் தங்கத்தேரினையும், பக்தர்கள் வியப்புறும் வண்ணம் அமைத்து, மேற்படி ஆலய சபைகளினால் முறையே ‘சிற்பக் கலாரத்தினம்’, ‘சிற்பக் கலைஞானி’ ஆகிய பட்டங்களையும் பெற்றார்.

ரொறன்ரோ ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயம், மிஸிஸாகா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், மொன்றியல் சிவா விஷ்ணு ஆலயம், ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் ஆகியவை இவரது கைவண்ணத்துக்கும் கலைவண்ணத்துக்கும் நற்சின்னங்களாக நிமிர்ந்து நிற்பவை. இந்த ஐந்து ஆலயங்களையும் குறுகிய காலத்துள் அழகிய வேலைப்பாடுகளுடன் நிர்மாணித்துள்ளமை பாராட்டுதற்குரியது. ரொறன்ரோ சிவா விஷ்ணு ஆலயம் இவருக்கு ‘சிற்பக் கலைமாமணி’ பட்டத்தினை வழங்கியது. முதன்முதலாக 1980ல் வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம் ‘சிற்பகலாகேசரி’ பட்டம் வழங்கியதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.’[1]

இவ்விதமாகக் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக கலைஞர் ஜெயராஜா அவர்கள் ஆற்றிவரும் சமய கலாச்சார சேவையைப் பாராட்டி பெப்ரவரி 2000த்தில் ‘தமிழர் தகவல்’ சஞ்சிகையும் விருது வழங்கிக் கௌரவித்தது.

---

1. ‘தமிழர் தகவல்’, ஒன்பதாவது ஆண்டு ‘மிலேனியம்’ மலர், பெப்ரவரி 2000

# 9

# சைவ வெளியீடுகள்

கனடாவிற் சைவ சமய அறிவைப் பரப்பும் நோக்குடன் பல சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. உற்சவங்கள், விரத நாட்கள் என்பவற்றை மக்களுக்குத் தெரிவிக்கும் செய்திப் பிரசுரங்களையும் சில கோயில்கள் இடையிடையே வெளியிடுகின்றன. சைவ சமயம் சார்ந்த பல நூல்களும் அச்சிடப்பட்டுள்ளன.

## சஞ்சிகைகள்

இந்து மாமன்றம் 'சைவ நீதி' என்னும் சஞ்சிகையையும் சைவ சித்தாந்த மன்றம் 'அன்புநெறி' என்னும் இதழையும் வெளியிட்டுச் சைவ அறிவைப் பரப்பி வருகின்றன. 'சைவ நீதி' தைப்பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு, தீபாவளி மலர்களாக வருடத்துக்கு மூன்று முறை வெளியிடப்படுகின்றது. 'அன்புநெறி' ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படுகின்றது. 'கனடா இந்து' ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா ஆலயத்தினால் இவ்வாண்டு முதல் வெளியிடப்பட்டு வரும் ஒரு காலாண்டுச் சஞ்சிகையாகும். கனடா கந்தசுவாமி தேவஸ்தான வெளியீடாக 'கோபுரம்' என்ற பெயரிற் சமயச் செய்தி இதழ் ஒன்றும் சிலகாலம் வெளிவந்தது.

அமைப்புகளுக்கு அப்பால் தனிப்பட்ட சில சைவ ஆர்வலர்களும் பத்திரிகைகளை வெளியிட்டு வருகின்றனர். இவர்களில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் சைவத் தொண்டர் திரு ச. திருநடராசா அவர்கள். 1992ஆம் ஆண்டு முதல் இவர் வெளியிட்டு வரும் 'இந்து தீபம்' கனடாவில் வெளிவரும் மூத்த சமயப் பத்திரிகையாக விளங்குகின்றது. எனினும் இதன் வெளியீட்டில் அண்மைக் காலமாகத் தொடர்ச்சியின்மை காணப்படுகின்றது.

'தெய்வதரிசனம்' என்றொரு இதழை இரு மாதங்களுக்கு ஒருமுறை ஸ்ரீ ஐயப்பன் ஆலய நிர்வாக சபைத் தலைவரும் அபிராமி அச்சக அதிபருமாகிய திரு. க. தம்பிராசா வெளியிட்டு வருகின்றார்.

இவை தவிர திரு. ஞா. வடிவேலு அவர்களின் ஆர்வத்தால் 'ஆத்மஜோதி'யும் புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'ஆலயமணி'யும் சில காலம் வெளிவந்தன. கனடா ஞான மன்றம் சமரச நோக்குடன் வெளியிட்டு வந்த 'மதம்' என்ற இதழ் சிலகால இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. 'ஆத்மஜோதி'யையும் வருடத்துக்கு மூன்று இதழ்களாக இப்பொழுது இந்து சமயப் பேரவை வெளியிடத் தொடங்கியுள்ளது.

## நூல்கள்

பலவகையான சைவ நூல்களும் கனடாவில் வெளியிடப்பட்டுள்ளன. இந்து சமயப் பேரவை, சைவ சித்தாந்த மன்றம், அபிராமி அச்சகம் ஆகிய அமைப்புகள் அதிக அளவில் நூல்களை அச்சேற்றிச் சமய அறிவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. தனிப்பட்ட எழுத்தாளர் படைப்புகள் சிலவும் வெளிவந்திருக்கின்றன.

சைவ நூல்கள் மற்றும் வெளியீடுகளின் பட்டியல் ஒன்று பின்வருமாறு:

### கனடா இந்து கலாச்சார மன்றம் வெளியிட்டவை

1. சைவத் திருமுறைத் தோத்திரத் திரட்டு
2. சமயப் பேட்டி: ஆத்மஜோதி நா. முத்தையா, புலவர் சிவானந்தன் ஆகியோரின் பேட்டிகளைக் கொண்ட ஒலிநாடா.

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை வெளியீடுகள்

1. தரிசனம் - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா
2. அர்ச்சனை மாலை - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா
3. என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதர் - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா
4. திருமுறைக் கதைகள் - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா
5. முத்தான தொண்டர் - கவிஞர் வி. கந்தவனம்
6. புதிய சைவ வினாவிடை: முதற் புத்தகம் - கவிஞர் வி. கந்தவனம்
7. தங்கம்மா நான்மணி மாலை - கவிஞர் வி. கந்தவனம்
8. சிவயோக சுவாமிகள் அருள்மொழிகள் (தொகுப்பு)
9. பன்னிருமாத நினைவுகள் - ஞானசுரபி, ஆத்மஜோதி நா.முத்தையா

**ஒலியிழை நாடாக்கள்**

10. சமய வாழ்க்கை - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா
11. சைவத்தின் பெருமை - ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா

## கனடா சைவ சித்தாந்த மன்ற வெளியீடுகள்

1. சைவ சமயக் கூட்டு வழிபாட்டு மலர்
2. சக்தி தோத்திரத் திரட்டு
3. விநாயகர் தோத்திரத் திரட்டு
4. முருகன் தோத்திரப் பாடல்கள்
5. சைவநெறி 1 - 9 வரை
6. திருவாசகத் தொகுப்பு
7. திருவாசகம்
8. திருக்குறள் சைவ நூலா? - திருமுருக கிருபானந்த வாரியார்

9. யோகர் சுவாமிகள் வாழ்க்கை வரலாறும் நற்சிந்தனையும் – தொகுப்பாசிரியர்: திரு. தி. விசுவலிங்கம்
10. திருக்குறள் விருந்து : விளக்கவுரை – யோகி தவத்திரு சுத்தானந்த பாரதியார்
11. சிவபுராண தத்துவம் – கவிஞர் வி. கந்தவனம்
12. தவத்திரு ஆறுமுக நாவலர் – சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார், தமிழ் ஆக்கம்: வை. ஏரம்பமூர்த்தி
13. பஞ்சபுராணத் திரட்டு – தொகுப்பு: தி. விசுவலிங்கம்
14. சைவ சமயக் கூட்டு வழிபாடு மலர் –2
15. விநாயகர் நான்மணி மாலை – சுப்பிரமணிய பாரதியார்
16. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்களின் தொகுப்பு

## அபிராமி அச்சக இலவச வெளியீடுகள்

1. வினைதீர்ப்பார் விநாயகர்
2. முருகன் தோத்திர மாலை
3. சகலகலாவல்லி மாலை
4. சனிபகவான் வழிபாடு
5. பிள்ளையார் கதை
6. திருவெம்பாவை
7. ஸ்ரீ ஐயப்பன் தினசரி வழிபாடு
8. கூட்டு வழிபாட்டுப் பாமாலை (ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்)
9. நித்திய கரும விதியும் சைவ அனுட்டான விதியும் (ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்)
10. ஜெனன தினம் (சாயி பாபா பிறந்ததின வெளியீடு)
11. சைவத் தோத்திரத் திரட்டு (மிசிசாகா ஜெயதுர்க்கா இந்து ஆலயம்)
12. அபிராமி அந்தாதி
13. அர்ச்சனை மாலை
14. ஆத்மஜோதி திரு. நா, முத்தையா அவர்களின் ஓராண்டு நினைவு மலர்
15. கந்தர் சஷ்டி கவசம்
16. கலியுகக் காவலன் ஸ்ரீ ஐயப்பன்
17. நவராத்திரி தேவிகள்

## பிற வெளியீடுகள்

1. பாரம்பரியமும் வழிபாடும், அகிலன் மூன்றாவது ஆண்டு நிறைவு வெளியீடு, 1992
2. THIRUMANDIRAM: A Classic of Yoga and Tantra by Siddhar Thirumoolar - Babaji's Kriya Yoga and Publications Inc., Montreal, Quebec, 1993
3. ஆன்மீக அலைகள் - புலவர் ஈழத்துச் சிவானந்தனின் ஆன்மீக உரைகள், சீதாலயம்
4. ஈழத்துத் திருத்தலங்கள் (ஆலய வரலாறுகள் - இசைச்சித்திரம்): ஒலித்தட்டு 1 - 11, வசந்தம் தயாரிப்பு
5. தமிழரும் இந்து மரபுகளும் –திருமதி வசந்தா நடராசன், B.A.
6. ஆறுபடை வீடுகளின் கந்த சஷ்டி கவசம் - தொகுப்பும் வெளியீடும் சித்த வைத்திய கலாநிதி, சைவப் புலவர் திரு. க. சிற்றம்பலமும் குடும்பத்தினரும்
7. இந்திய திருத்தல யாத்திரை - ச. சதாசிவம் சேவியர்
8. தோத்திரத் திரட்டு - திரு. சி. சுப்பிரமணியம் நினைவு வெளியீடு
9. திருவாசகத் தொகுப்பும் ஈழத்துச் சிதம்பர வரலாற்றுச் சுருக்கமும் - தொகுப்பு: தி. விசுவலிங்கம், வெளியீடு: கே. கே. எலெக்ரோனிக்ஸ், ஸ்காபரோ பல் வைத்திய நிலையம்
10. கந்தர் சஷ்டி கவசம், சங்கர் அச்சகம், ஸ்காபரோ
11. அணையாத தீபம் - ஆத்மஜோதி, சங்கர் அச்சகம், ஸ்காபரோ
12. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த் திருவிழா பிரார்த்தனை மலர், சங்கர் அச்சகம், ஸ்காபரோ
13. கோவில் வழிபாடு - திரு. குமார் புனிதவேல், இந்து மா மன்றம், கனடா
14. Festivals of Saiva Religion - K. Punithavel
12. Pantheon of Saiva Deities - K. Punithavel
13. துயர் துடைத்திடும் துங்கக் கரிமுகத்துத் தூமணி - திருமதி கமலா சாந்தலிங்கம்
14. கூட்டுப் பிரார்த்தனைப் பாமாலை: ரொறன்ரோ அன்னை ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயத்தின் திருப்பணிக்கு - சரவணமுத்து நற்குணம்

15. பிள்ளையார் துதியும் ஔவையார் மதியும் : பண்டிதர் வி. வ. நம்பி, இந்து மாமன்றம் கனடா
16. ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் கூட்டுப் பிராத்தனைப் பாடல்கள் - சிவா ராதாகிருஷ்ணன்
17. வேலா வடிவேலா - ஆழ்கடலான் -முருகவே பரமநாதன், கனடா கந்தசாமி கோயில் வெளியீடு.
18. நினைக்க நினைக்க - ஆழ்கடலான் - நெய்தலங்கான வெளியீடு, கனடா

## சிறப்பு மலர்கள்

1. Maha Vimana Kumbabishekam, Hindu Temple Society of Canada, 1992
2. வாணி விழா மலர்கள், கனடா தமிழ்க் கலாச்சாரச் சங்கம்
3. ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் பாராட்டு விழா மலர், ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, 1994
4. பொங்கல் விழா மலர், கனடா இந்து கலாச்சார மன்றம், 1995
5. பொங்கல் விழா மலர்கள், கியூபெக் சைவ மகாசபை
6. அருள்மிகு திருமுருகன் கோயில் குடமுழுக்கு விழா மலர், 1995
7. சிவயோக மலர், சிவதொண்டன் நிலையம், கனடா, 1997
8. ஏழாவது உலக சைவ மாநாடு - கனடா, சிறப்பு மலர், 1999
9. சிவஞானம், ஏழாவது உலக சைவ மாநாடு - கனடா, சிறப்பு மலர் -2, 1999

# 10

# பேசத் தகுந்த பெருநிகழ்வுகள்

கனடாவிற் சமயம் வளர்க்கும் மன்றங்கள் ஆண்டுதோறும் பல விழாக்களை எடுத்து வருகின்றன. கியூபெக் சைவ மகாசபையின் பொங்கல் விழா, கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் திருவாசக விழா, திருவருட் செல்வர் விழா போன்றவை நல்ல உதாரணங்கள். கனடாத் தமிழ்க் கலாச்சார சங்கம் நடத்திவந்த வாணி விழா, ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்கு நடத்திய பாராட்டு விழா, ஆறுமுக நாவலருக்கு 16. 07. 1999ல் எடுத்த முழுநாட்பெருவிழா, இந்து மாமன்றம் 'சைவநீதி' சஞ்சிகைக்கு வைத்த முதல் வெளியீட்டு விழா ஆகியனவும் நினைவைவிட்டு நீங்காதவை.

இவை போன்றவும் பிறவுமாகிய மன்ற விழாக்களுக்கு அப்பால், முழுக் கனடியச் சைவ உலகத்தின் கவனத்தையும் ஈர்த்த சில வரலாற்று நிகழ்வுகளும் இங்கு நடைபெற்றுள்ளன. கனடாவில் சைவ வளர்ச்சியை உலகுக்கு எடுத்துக் காட்டியதோடு கனடியச் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வையும் செழிக்கச் செய்த அந் நிகழ்வுகள் பற்றிய சில விவரங்களை இங்கு பதிவுசெய்வது பொருத்தமானதாகும்.

## நான்காவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாடு

கனடியச் சைவ மக்கள் இரு சைவ மாநாடுகளை நடத்திய பெருமையுடையவர்கள். முதலாவதாக நடந்தது நான்காவது

அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாடு.

சைவ சமயத்தின் கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் உலகெங்கும் பரப்பும் நோக்குடன் திருக்கைலாய பரம்பரை தருமை ஆதீன 26வது குருமகா சந்நிதானமாகிய சிவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தமது ஆதீனத்தில் அனைத்துலக சைவ சித்தாந்த ஆதீனத்தை நிறுவினார். அதன்மூலம் இரண்டு வருடங்களுக்கு ஒன்றாக அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாடுகளை அவர் நடத்தத் தொடங்கினார்.

முதலாவது மாநாடு தமிழ் நாட்டிலும் இரண்டாவது மலேசியாவிலும் மூன்றாவது வட இந்தியாவிலுள்ள பெனாரிஸ் நகரத்திலும் நடந்தன. நான்காவது மாநாடு சைவ சித்தாந்த ஆதீனத்துடன் தொடர்புடைய கலாநிதி கிருஷ்ணா சிவராமன் அவர்களின் வேண்டுகோளின் பேரில் கனடாவில் நடத்தப்பெற்றது.

கலாநிதி கிருஷ்ணா சிவராமன் அவர்கள் கொங்கோடியாப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயப் படிப்புத் துறையை அமைக்க அயராது முயன்று வெற்றி பெற்றவர். கனடாவில் முதன் முதலாகக் கொங்கோடியாப் பல்கலைக் கழகத்திலேயே இந்து சமயப் படிப்புக்குப் பீடம் ஒன்று அமைக்கப்பட்டது என்பதுவும் குறிப்பிடத் தக்கது. இந்து சமய பீடத்தின் தலைவராகவும் கலாநிதி கிருஷ்ணா சிவராமன் அவர்கள் பணிபுரிந்து கனடாவில் மட்டுமன்றி அமெரிக்காக் கண்டம் எங்கணும் இந்து சமய வளர்ச்சிக்கு உழைத்தவர்.

கலாநிதி கிருஷ்ணா சிவராமன் அவர்களின் ஆலோசனையுடனும் 'இந்து தீபம்' ஆசிரியர் திரு. ச. திருநடராசா அவர்களின் முயற்சியுடனும் இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயில் ஆதரவுடனும் கனடாவில் நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு 1994ஆம் ஆண்டு யூலாய் 1 முதல் 10ஆந்



4ஆவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டில் பங்குபற்றிய அறிஞர்கள் சிலர்

திகதி வரை நடத்தப்பெற்றது.

யூலாய் 1ஆந் திகதி வெள்ளிக்கிழமை இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் யோகர் சுவாமியின் பிரதம சீடரும் ஹவாயில் உள்ள குவை ஆதீனகுரு மகா சந்நிதானமுமாகிய சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து 3ஆந் திகதிவரை யோக் பல்கலைக் கழகத்திலும் 7 – 8ஆந் திகதிகளில் ஒட்டாவாவிலும் 9 – 10ஆந் திகதிகளில் மொன்றியலிலும் ஆய்வு அமர்வுகளும் விழாக்களும் இடம்பெற்றன. ஒட்டாவாவில் கால்டன் இந்துக் கோயிலின் ஆதரவிலும் மொன்றியலில் கியூபெக் சைவ மகாசபையின் ஆதரவுடனும் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து சைவ அறிஞர்கள் கலந்து கொண்டு சைவ சமயத்தின் மகிமையை எடுத்துக் கூறியதோடு அதனைச் சைவ மக்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் வளர்க்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திச் சென்றனர்.

இம் மாநாடு கனடியச் சைவ சமயத்தவர் மத்தியில் ஏற்படுத்திய விளைவுபற்றி மாநாட்டுக் குழுத் தலைவரும் கனடா இந்து ஆலய அறங்காவலர் சபையின் அப்போதைய தலைவருமாகிய திரு. நா. சிவலிங்கம் அவர்கள்,

“... சுத்த சைவ சமயிகளான நம்மவர்கள் முழுமையாகச் சமய வாழ்வு வாழ முடியாதவர்களாக இங்கே இருக்கின்றனர். இதற்கு அடிப்படையான காரணங்கள் பலவுண்டு. இந்த வேளையில் மத மாற்றம் என்னும் விஷ வாயு வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளதானது அனைவரையும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியிருக்கின்றது. இப்படியான ஒரு கால கட்டத்தில் சைவ சித்தாந்த மாநாடு நடத்தப்பெற்றதும்

ஈழம், தமிழகம் உட்படப் பல வெளிநாடுகளிலிருந்து அறிஞர் பெருமக்கள் வருகை தந்து பேருரைகள் நிகழ்த்தியமையும் இங்கு வாழும் சைவ மக்கள் மத்தியில் ஓர் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது"[1]

என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

மிகவும் முக்கியமாக, இம்மாநாட்டின் பின்னரே சமயத்தைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய அவசியத்தைப் பெற்றோர்கள் உணர்ந்து கொண்டனர் எனின் மிகையாகாது. கனடிய மண்ணின் சைவ சமயக் கல்வி வளர்ச்சியை ஆராயின் இந்த உண்மை புலனாகும்.



சைவ சித்தாந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பேராளர்களுக்குக் கனடியத் தமிழ் மக்கள் நடத்திய பாராட்டு உபசார விழாவில் கலந்து கொண்டவர்களில் சிலர்.
இடமிருந்து வலம் திரு. நா. சிவலிங்கம், திருவாசகமடம் சரவணமுத்து சுவாமிகள், திரு எஸ். திருச்செல்வம், திருக்கேதீஸ்வர ஆலயச் செயலாளர் சட்டத்தரணி எஸ். நமசிவாயம், திரு. மாணிக்கவாசகர்.

## சிவயோக சுவாமிகளின் 125ஆவது ஜெயந்தி விழா

இவ் விழா 1997ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பகல் இறிச்மண் ஹில் ஆலயத்தில் சிவபூசையுடன் ஆரம்பமாகியது. மாலை நிகழ்ச்சிகள் ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் திரு. நா. சிவலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன.

விழாவின் சிறப்பு அம்சமாக ஆகஸ்ட் 8 முதல் 28 வரை தவத்திரு சிவயோக சுவாமிகளின் திருவுருவ ஊர்வலம் அமைந்திருந்தது. திருவுருவம், சிவயோக சுவாமிகளின் பிரதம சீடரும் ஹவாயிலுள்ள குவை ஆதினக் குருதேவருமாகிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஏற்பாட்டில் பஞ்சலோகங்களால் அமைக்கப்பெற்றது. இத்திருவுருவம் உலகவலமாகக் கொண்டு செல்லப்பட்டு இறுதியில் யோகர் சுவாமிகள் வாழ்ந்த திருவிடமாகிய யாழ்ப்பாணத்துக் கொழும்புத்துறையில் அது கோயில் கொள்ள வேண்டும் என்பது குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் திருவுள்ளமாகும்.



சிவயோக சுவாமிகளின் திருவுருவச்சிலை

உலக ஊர்வலம் கனடாவிலிருந்து தொடங்க வேண்டும் என்பதும் அவரது சித்தமாக இருந்ததால் திருவுருவச் சிலை கனடா சிவதொண்டன் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஊர்வலம் இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயிலில் ஆராதனைகளுடன் ஆரம்பமாகியது.

அடுத்து சைவ சித்தாந்த மன்றம் மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் பெரும் வரவேற்பு அளித்தது. அதனைத் தொடர்ந்து மிசிசாகா, ரொறன்ரோ, ஒட்டாவா, மொன்றியல் உட்படப் பல பகுதிகளிலும் உள்ள கோயில்களும் சைவ அமைப்புகளும் திருவுருவச் சிலையை வரவேற்று, மக்கள் தரிசனத்துக்கு ஒழுங்குகள் செய்தன.

இறுதி நாள் விழா ஆகஸ்ட் 28ல் ஸ்காபரோ அத்திலாந்தா மண்டபத்தில் குருபூசை, கூட்டு வழிபாடு, சொற்பொழிவுகள், பண்ணிசைக் கச்சேரி, போட்டிகளிற் பங்கு பற்றிய பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்குதல், சிவயோக மலர் வெளியீடு முதலாய பல நிகழ்ச்சிகளோடு பக்திபூர்வமாக நிறைவேறியது.

சிவதொண்டன் நிலையத்துடன் ஏனைய சைவ அமைப்புகளும் சேர்ந்து ஈழத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் 125ஆவது ஜெயந்தி விழாவைப் பல நாட்களாகப் பல இடங்களில் நடத்தி முடித்தமை சிவயோக சுவாமிகளின் ஆன்ம பலத்திலும் அருளாட்சியிலும் எம்மவர் வைத்திருந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

## ஏழாவது உலகச் சைவ மாநாடு

கனடாவில் நடைபெற்ற மற்றுமொரு சைவ மாநாடு 7ஆவது உலகச் சைவ மாநாடு ஆகும்.

1999ஆம் ஆண்டு யூலாய் 30, 31, ஆகஸ்ட் 1 ஆகிய மூன்று தினங்களிலும் உலகச் சைவப் பேரவையின் முன்னேற்பாட்டுடனும் கனடா இந்து மாமன்றத்தின் அனுசரணையுடனும் இம் மாநாடு



7ஆவது உலக சைவ மகாநாட்டில் ரொறன்ரோ மாநகர முதல்வர் கனம் மெல் லாஸ்ட்மன் நந்திக்கொடி ஏற்றுகிறார்

சிறப்புற நடத்தப்பெற்றது.

ரொறன்ரோ மாநகர முதல்வர் கனம் மெல் லாஸ்ட்மன் நந்திக் கொடியை ஏற்றி மாநாட்டைத் தொடக்கி வைத்தார். பகலில் கருத்தரங்கங்கள் ஸ்காபரோவிலும் மாலையில் கலை நிகழ்ச்சிகள் ஸ்காபரோ, மிசிசாகா ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டன.

உலகச் சைவப் பேரவையின் தலைவர் தவத்திரு சிவநந்தி அடிகளார், கயிலை மாமுனிவர் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் உட்படப் பல சைவச் சான்றோர்கள் உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்து விழாவினைச் சிறப்பித்திருந்தார்கள்.

மாநாட்டையொட்டி இரு சிறப்பு மலர்களும் வெளியிடப்பட்டன. வாழ்த்துரையில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், "ஈழத் தமிழ் மரபினர் உலகெங்கும் பரவி சிவநெறியை, தமிழ் மரபைக் காப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்"[2] என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

இம் மாநாடு சிறுவர்களையும் இளைஞர்களையும் அதிகம் ஈடுபடுத்தி அவர்கள் மத்தியில் சைவ மரபு பற்றிய விழிப்புணர்வையும் அதனை இங்கு வளர்க்க வேண்டிய பொறுப்புணர்வையும் ஏற்படுத்திய வகையால் முக்கியத்துவம் பெறுகின்றது. கனடாவின் சைவ வளர்ச்சிப் பரிமாணத்தையும் உலகத்தவர்க்கு எடுத்துக் காட்ட இம் மாநாடு பெரிதும் உதவியிருக்கின்றது.

---

1. ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் பாராட்டு விழா மலர், 1994
2. ஏழாவது உலக சைவ மாநாடு - கனடா, சிறப்பு மலர், 1999

# 11


## சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இந்நாட்களிற் சைவ உலகில் மிகவும் பேசப்படுபவர் குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி யாவர். உலகெங்கும் சைவத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு வரும் குருதேவர் கனடாவில் வாழும் சைவ மக்களின் ஆன்மீக வாழ்விலும் அதிக அக்கறை காட்டிவருகின்றார். சிவப்பணியே அவரது தவப் பணியாயினும் இந்த அக்கறைக்குரிய பிரதான காரணம் அவருக்கும் ஈழத்துச் சைவ மக்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய உறவெனின் மிகையாகாது.

எத்தகைய உறவு? பிறப்பால் அமெரிக்கரான குருதேவருக்கும் ஈழத்துக்கும் என்ன தொடர்பு? அதுவும் குறிப்பாக, இருபத்தைந்து இலட்சத்துக்கும் அதிகமான ஈழத்துச் சைவத் தமிழர் 'எங்கள் குருதேவர்' என்னும் உரிமையோடு போற்றுவதற்குரிய காரணந்தான் யாது?

குருதேவர் 1949ஆம் ஆண்டு வைகாசிப் பௌர்ணமி நாளன்று, தமது 22ஆவது வயதில் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் சீடராகி, சிவாய சுப்பிரமுனிய சுவாமி என்னும் நாமதீட்சையைப் பெற்றார்.

யோகர் சுவாமிகள் தமது அமெரிக்க சீடருக்கு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்து, உலகெங்கும் சைவத்தைப் பேணி வளர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து எட்டு ஆண்டுகள்வரை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய



இடங்களில் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் அமைக்கப்பெற்ற சிவதொண்டன் நிலையங்களிலே தங்கிச் சைவ சித்தாந்த நூல்களையும் வேதாகமங்களையும் கற்றுத் தெளிந்தார்.

பின்னர் சுப்பிரமுனியசுவாமி அளவெட்டியில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை அமைத்தார். அதுவே உலகளாவிய அவரது இன்றைய சமயப் பணிகளுக்கெல்லாம் அத்திவாரமாக அமைந்தது.

குருதேவர் தமது ஞானகுரு யோகர் சுவாமிகளின் ஆணைப்படி அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்று சித்தாந்த திருச்சபையை நிறுவினார். பின்னர் தாம் செய்ய வேண்டிய இறைபணிகளுக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும் வகையில் யோக சாதனைகளை மேற்கொண்டார். அவற்றின் பயனாக ஞான திருட்டி, ஞான தரிசனம், ஞான ஒளி ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன.

1957ல் இமாலய கலாசேத்திரத்தை நிறுவினார்; அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலைக் கலிபோனியாவில் திறந்து வைத்தார். 1970ஆம் ஆண்டு சைவ சித்தாந்த திருச்சபையின் தலைமைப் பீடமாக குவை ஆதீனத்தைக் குருதேவர் அமைத்துச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை உலகெங்கும் பரப்பத் தொடங்கினார். இந்த ஆதீனத்தில் இவர் அமைத்த நடராசர் கோயில் மேலை நாடுகளில் அமைக்கப்பெற்ற முதலாவது சிவன் கோயிலாக விளங்குகின்றது.

குவைத் தீவு ஹவாய் தீவுக் கூட்டங்களில் ஒன்று. குவைத் தீவில் புனித வைலுவநதிக் கரையில் 1975ஆம் ஆண்டு இறைவனருளால் குருதேவர் சுயம்புலிங்கம் ஒன்றைக் கண்டெடுத்தார். சுயம்புலிங்கத்துக்கு 'சன்மார்க்க இறைவன் கோயில்' என்ற பெயரில் ஆலயம் ஒன்றை அமைப்பதில் குருதேவர் தற்பொழுது ஈடுபட்டுள்ளார். முழுவதும் கருங்கற்களைக் கொண்டு ஆகம விதிகளுக்கு அமைய இக் கோயில் கட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் மட்டுமன்றி, கனடாவிலும் ஏனைய மேலைய நாடுகளிலும் கோயில்களைக் கட்டிவரும் சைவத் தமிழருக்கு குருதேவர் நிதியுதவி புரிந்தும் பிரதிட்டை செய்வதற்கு மூர்த்திகளை வழங்கியும் உதவி வருகின்றார். மொறீசியஸ் நாட்டில் சைவ தருமசாலை ஒன்றினைக் குருதேவர் உருவாக்கியுள்ளார். அதிற் பஞ்சமுக கணபதிக்குக் கோயில் ஒன்றையும் அமைத்துள்ளார்.

அதுமட்டுமன்றி உலகில் உள்ள சைவ மக்களை ஊக்குவிக்கு முகமாக யாத்திரைகளை மேற்கொண்டு அவர்களது பிரச்சனைகளை நேரிற் கண்டறிந்து வேண்டிய ஆலோசனை களையும் அளித்து வருகின்றார்.

சமய அறிவைப் பரப்பும் நோக்குடன் குருதேவர் பல நூல்களையும் பாட புத்தகங்களையும் எழுதியுள்ளார். இமாலய கலாசேத்திரத்தின் மூலம் அவர் வெளியிட்டுள்ள முப்பதுக்கும் அதிகமான சமய நூல்கள் தெளிவான விளக்கங்களுக்கும் திருத்தமான பதிப்புக்களுக்கும் உலகெங்கும் பெயர்பெற்றுள்ளன.

1979ஆம் ஆண்டு Hinduism Today என்னும் அனைத்துலக மாத இதழைத் தொடக்கிச் சிறப்புற நடத்தி வருகின்றார். சனாதன தருமத்தைப் போதித்துவரும் இச்சஞ்சிகை உலகிலுள்ள இந்துக்களின் வாழ்வையும் வளத்தையும் பிரதிபலிப்பதோடு இந்து மக்களை இணைக்கும் ஒரு தொடர்புச் சாதனமாகவும் விளங்குகின்றது.

1995ஆம் ஆண்டில் இந்து கலாச்சார அறக்கட்டளை ஒன்றைக் குருதேவர் அமைத்தார். அதன் மூலம் நிதி திரட்டி உலகிலுள்ள இந்து நிலையங்களுக்கு ஆதரவு அளித்து வருகின்றார்.

இவ்விதம் சைவ சித்தாந்த ஆதீனம், இமாலய கலாசேத்திரம், அனைத்துலகப் பத்திரிகை, அறக்கட்டளை ஆகிய நான்முகப்பட்ட வழிகளில் குருதேவர் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன.

சமயப் பணிகளுடன் பலவித சமூகத் தொண்டுகளிலும் குருதேவர் கவனம் செலுத்தி வருகின்றார். இலங்கையில் 1983 யூலாய் இனக் கலவரம் தோற்றுவித்த பரிதாப நிலைமைகளைப் பலரும் அறிவர். குருதேவர் இலங்கைத் தமிழர் அகதி நிவாரண நிதியம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியமை அவரின் சமூகத் தொண்டுக்கு நல்லதோர் உதாரணம்.

குருதேவரின் உலகளாவிய சமயப் பணிகளைப் பாராட்டி 1986ஆம் ஆண்டு உலக சமயப் பாராளுமன்றம் அவரை 'ஜகதாச்சாரியார்' (உலக ஆசிரியர்) எனக் கணித்துச் கௌரவித்தது. அதே அமைப்பு 1995ஆம் ஆண்டு குருதேவரின் ஒப்பற்ற வெளியீடுகளைப் போற்றித் 'தருமசக்கரம்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது. 1998ல் கேரளாவில் உள்ள விஸ்வ இந்து பரிசாத்து என்னும் அமைப்பு 'இந்த நூற்றாண்டின் இந்துக் குரல்' எனக் குருதேவரைப் போற்றியது.

இன்று உலகத்தில் நடைபெறும் சமய அல்லது இந்து/சைவ மாநாடுகள் பலவற்றில் பங்குபற்றி ஈழத்தைப்பற்றியும் யோகர் சுவாமிகளைப் பற்றியும் சைவத்தைப் பற்றியும் சனாதன தருமத்தைப் பற்றியும் கூறிவருபவர் குருதேவரைப்போல் வெறொருவர் இலர். பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் சைவம், மெய்யியல் ஆகிய துறைகளில் விரிவுரை நிகழ்த்தும் அழைப்பாணைப் பேராசிரியராகவும் இவரை நியமித்துள்ளன என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

## கனடாவிற் குருதேவர் பணிகள்

கனடாவில் அல்பேட்டா மாகாணத்தில் உள்ள எட்மண்டன் நகரில் 1981ல் மகாகணபதி சங்கம் அமைக்கப்பட்டமைக்குக் குருதேவர் காரணமாக இருந்தார். அவரது கனடிய மாணவர் இருவர் (வெள்ளையர்) சைவத்தைத் தழுவினர். அரன்வேலர் என்றும் வேலன் என்றும் குருதேவர் அவர்களுக்கு நாம தீட்சை செய்து, விநாயகர் விக்கிரகம் ஒன்றினைக் கொடுத்து அதற்குக் கனடாவிற் கோயில் அமைக்கும் வண்ணம் பணித்தார்.

அரன்வேலரும் வேலனும் எட்மண்டன் நகருக்கு வந்து அங்குள்ள சைவத்தமிழர் சிலரின் உதவியுடன் விநாயருக்குக் கோயில் அமைக்கும் நோக்குடன் சங்கம் ஒன்றை அமைத்தனர். அதுவே 'அல்பேட்டா மகா கணபதி சங்கம்' ஆகும். அதனைத் தொடர்ந்து சங்கம் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்று அங்கு விநாயகர் விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்து வழிபாட்டைத் தொடங்கியது. அங்குள்ள சைவமக்கள் இதனைப் போற்றி வரவேற்று, கோயில் இல்லாத ஊரில் கோயில் கட்டும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டனர்.

'இந்தச் சந்தர்ப்பத்தில் அரன்வேலர் பற்றிக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும். ஒவ்வொரு ஞாயிறும் எட்மண்டன் விநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்வதற்குக் குடும்ப சமேதராக வருகிறார் அரன்வேலர். இந்தியப் பாணியில் ஜிப்பா அணிந்து சந்தன குங்குமத்துடன் காட்சி தருகிறார்கள் இவரும் இவரது இரு மகன்மாரும். இவரது மனைவி சேலை உடுத்தும் மகள் பாவாடை தாவணி அணிந்தும் அசல் சைவப் பெண்களைப் போலவே காட்சி தருகின்றார்கள். கோவில் வழிபாட்டுக்கென்றே, கோவிலுக்கு அருகில் வீடு வாங்கி வசித்து வருகின்றார். இவர் ஒரு பிரபல வக்கீல். தனது ஓய்வு நேரங்களைக் கோவில் திருப்பணிக்காகச் செலவு செய்கின்றார். இவரைப் போலவே வேலனும் கோவில் திருப்பணிகளில் முழு மூச்சாக உழைக்கின்றார். இவர் ஓர் ஆசிரியர். இவர்கள் இருவரையும் நம்மோடு ஒப்பிட்டு நோக்கும்போது நாங்கள் உண்மையில் சைவர்கள்தானா என்ற எண்ணம் என் மனத்தில் எழுந்தது. சைவர்களாகப் பிறந்தும் எமது சமயத்தின் அருமை பெருமைகளை அறியாது, ஏதோ கோவிலுக்கு எப்போதாவது போய் அர்ச்சனை செய்வதோடு எமது கடமை முடிந்ததாக நினைத்துக் கொள்கிறோம்.' என்று ஆதங்கம் கொள்கிறார் திரு. சின்னையர் சிவநேசன் அவர்கள்.

சற்குரு சிவாயசுப்பிரமுனியசுவாமி 1991ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் எட்மண்டனுக்கு வருகை தந்து ஆலயத் திருப்பணிகளை ஆசீர்வதித்தார்கள்.[2] 31. 05. 96ல் கோயிலுக்கு அத்திவராக் கல் நாட்டப்பட்டது. படிப்படியாக கோயில் கட்டிடப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 2000 ஆண்டு யூலாய் 7ஆம் திகதி

குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

1994ஆம் ஆண்டு குருதேவர் கனடாவுக்கு வருகை தந்திருந்தார். கனடாவில் முதன் முதலாக நடத்தப்பெற்ற நான்காவது அனைத்துலக சைவ மாநாட்டைத் தொடக்கி வைப்பதற்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார். அப்பொழுதும் ஈழத்து ஞானகுரு யோகர் சுவாமிகளைப்பற்றியும் அவர் தன்னை ஆட்கொண்ட அனுபவம்பற்றியும் விளக்கினார். கனடாவில் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் வழிபாட்டின் அவசியம்பற்றியும் வலியுறுத்தினார்.

சிவதொண்டன் நிலையம் ஒன்று இங்கு 1996ல் உருவாகுவதற்கும் அவர் காரணமாக இருந்தார்; அதன் காப்பாளராக இருந்து அதனை வழிநடத்தியும் வருகின்றார். யோகர் சுவாமியை முதன்மையாகக் கொண்டு கனடாவில் பலவகையான சமயப்பணிகளைச் செய்துவரும் சிவதொண்டன் நிலையம் குருதேவரின் நூல்களையும் பிற பிரசுரங்களையும் சைவ உலகுக்கு அறிமுகப்படுத்தியும் வருகின்றது.

1997ல் ஞானகுரு யோகர் சுவாமிகளின் 125ஆவது பிறந்த தினத்தை உலகளாவிய வகையில் கொண்டாடும் பணியைக் குருதேவர் தொடக்கிவைத்தார். யோகர் சுவாமிகளின் சிலை ஒன்றைப் பஞ்சலோகங்களால் வடித்து அதனை உலகெங்கணும் உள்ள 75க்கும் அதிகமான சைவக் கோயில்களுக்கும் ஈழத்துச் சைவ நிறுவனங்களுக்கும் உலாவாகக் கொண்டு சென்று ஈற்றில் யோகர் சுவாமிகள் வாழ்ந்த பதியாகிய கொழும்புத்துறையில் அவரது சிலையைக் கோயில்கொள்ளச் செய்வது குருதேவரின் திட்டமாகும்.

ஊர்வலம் ஈழத் தமிழர் அதிகம் உள்ள கனடாவிலிருந்து தொடங்க வேண்டும் என்னும் நோக்குடன் சிலையை முதன்முதலாக கனடா சிவதொண்டன் நிலையத்துக்குக் குருதேவர் அனுப்பி வைத்தார். அதனைத் தொடர்ந்து சிவயோக சுவாமிகளின் 125ஆவது பிறந்தநாள் விழா இங்கு பல இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

குருதேவரின் இந்தப் பணி யோகர் சுவாமிகள்பற்றிய பெருமையையும் அவரின் நற்சிந்தனைகளையும் ஈழத் தமிழர் மத்தியில் நன்கு பரப்ப உதவியது. ஈழத் தமிழர் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவரும் எங்கள் ஞானகுருவைப் பற்றியும் சைவத்தைப் பற்றியும் ஓரளவு தெரிந்துகொள்ள இந்தக் கொண்டாட்டம் வழிவகுத்தது.

இவ்விதம் சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி கனடாவிற் சைவம் தழைத்தோங்கப் பலவழிகளிலும் உதவிவருவது யாம் செய்த தவப் பயனேயாகும்.

---

1. கலைவிழா மலர், அல்பேட்டா மஹா கணபதி சங்கம், ஒன்ராறியோ கிளை, 1994.
2. இந்து தீபம், மார்கழி 1996, பக். 22

# 12

## ஞானசுரபி,
## ஆத்மஜோதி நா. முத்தையா

1994ஆம் ஆண்டு யூலாயில் கனடாவில் நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு நடைபெற்றது;. கனடாவில் முதன் முதலாக நடைபெற்ற இச்சைவ மாநாட்டுக்கு எமது தாயகத்திலிருந்து வருகை தந்த பெரியார்களில் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஒருவர்.

மாநாடு ஒன்ராறியோ மாகாணத்தில் இறிச்மண் ஹில், யோர்க் பல்கலைக் கழகம், ஒட்டாவா ஆகிய இடங்களிலும் கியூபெக் மாகாணத்தில் மொன்றியலிலும் நடைபெற்றது. முத்தையா அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று மிகுந்த உற்சாகத்தோடு பங்குபற்றினார்.

அதே ஆண்டு, தமிழீழத்தில் தாம் தோற்றுவித்ததைப் போன்ற இந்து சமயப் பேரவை ஒன்றினை இங்கும் அமைத்தார். பேரவைக்கு சமய, தமிழ் வகுப்புகளை நடத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

கோயில்களும் சமய, சமூக அமைப்புக்களும் அவரை வரவேற்கவும் அவரது சொற்பொழிவைக் கேட்கவும் கூட்டங்களை ஒழுங்கு செய்தன. முத்தையா அவர்களின் உரைகள் புலம் பெயர்ந்த நாடுகளிற் சைவ மக்கள் தமது சமயத்தையும் மொழியையும் வளர்க்க வேண்டிய அவசியத்தை

வலியுறுத்துவதாக அமைந்தன. அவை சைவர்கள் மத்தியில் மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தின.
30. 07. 1994 சனிக்கிழமை இந்து சமயப் பேரவை முத்தையா அவர்களின் சமயப் பணிகளைப் பாராட்டி விழாவெடுத்தது.[1]

'ஈழத்திற் சைவமும் தமிழும் தழைப்பதற்கு அவ்வப்போது பல சான்றோர்கள் தோன்றியுள்ளனர். அந்த வகையில் அந்நியர் ஆட்சிக் காலத்தில் தோன்றியவர் நல்லை நகர் நாவலர். அதேபோல் சிங்களவர் ஆட்சிக் காலத்தில் நாவலரின் சாயலில் பணி செய்வதற்குத் தோன்றியவர்தான் ஏழாலை ஈன்ற நா. முத்தையா அவர்கள். ஈழத் திருநாட்டில் மட்டுமல்லாது கடல் கடந்த தேசங்களிலும் இவரின் பண்ணோடு கூடிய கூட்டு வழிபாடும் சொற்பொழிவுகளும் இடம்பெற்று, எந்நாட்டவருக்கும் தென்னாடுடைய சிவனே இறைவன் என்பதை எடுத்து விளக்கின.

'திக்கற்றவர்களுக்கு உதவுதல் பெரிய பணி. ஆதுலர்சாலை வைத்து அறப்பணி வேட்டல் மணிமேகலை கண்ட ஆபுத்திரனுக்கு இலகு. ஆனால் ஆபுத்திரனைவிட மேலாக உண்டி, உடை, உறையுள் கொடுத்து பல திக்கற்ற குழந்தைகளை ஈழத்தில் உள்ள கைதடி என்னும் இடத்தில் வைத்து இந்தக் கலியுக ஆபுத்திரன் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் போற்றிப் பராமரிக்கின்றார். வாழ்க இவர் பணி'

என வாழ்த்தியும்,

'அனைத்துலக நான்காவது சைவ சித்தாந்த மாநாட்டிற் கலந்து கொள்வதற்காகக் கனடா நாட்டுக்கு விஜயம் செய்த அன்னார், இங்குள்ள தமிழர் பலரின் இல்லங்களுக்கு எழுந்தருளி கூட்டுவழிபாடு, நற்சிந்தனை என்பவற்றை மக்களிடையே பரப்பித் தமிழும் சைவமும் வளரப் பணிசெய்கின்றார். இவரின் பணி தேவார முதலிகளின் பணியை ஒத்தது. அன்னார் மீண்டும் கனடாவுக்கு வந்து சமய, தமிழ்ப் பணிகள் செய்ய, நீண்ட ஆயுளை அன்னாருக்கு வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக'



ஆத்மஜோதி நா. முத்தையா
1918 - 1995

என்று வணங்கியும்[2]

இந்து சமயப் பேரவை 'ஞானசுரபி' என்னும் பட்டத்தை ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்குச் சூட்டிக் கௌரவித்தது. இந்து சமயப் பேரவையின் அழைப்பின் பேரில் ஞானசுரபி அவர்கள் மீண்டும் 1995 ஏப்பிரலில் கனடாவுக்கு வருகை தந்தார்கள். சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுதல், அந்தர்யோக வகுப்புகள் நடத்துதல், சமய தமிழ் வகுப்புகளை ஆரம்பித்தல், வீட்டுப் பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றைச் செய்தல் போன்ற பணிகளில் அவர் ஈடுபட்டார்.

பல சமய நூல்களையும் இங்கு இருந்த காலத்தில் அவர் எழுதியுள்ளார். தரிசனம், என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன், திருமுறைக் கதைகள், சாயி பாபா, துர்க்காதேவி, சுவாமி சிவானந்தர், யோகி இராம் சரத்குமார் ஆகிய ஏழு நூல்களைக் குறுகிய காலத்தில் எழுதி முடித்தமை அவரது எழுத்தாற்றலையும் பரந்த அறிவையும் எடுத்துக் காட்டுகின்றது.

இவற்றுள் 'தரிசனம்' என்னும் நூலும் அவரைப் பற்றி இந் நூலாசிரியர் எழுதிய 'முத்தான தொண்டர்' என்னும் நூலும் 1995 செப்டம்பர் 4, திங்கட்கிழமை இந்து சமயப் பேரவையினால் வெளியிட்டு வைக்கப்பட்டன.

6ஆம் திகதி புதன்கிழமை இரவு அவர் மொன்றியலுக்குப் பயணம் செய்தார். மொன்றியல் துர்க்கை அம்மனின் கும்பாபிடேக வைபவத்துக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். 8ஆம் திகதி 'தரிசனம்' நூல் அறிமுகமும் மாலை அவரது சொற்பொழிவும் கோயிலில் நடைபெற இருந்தன.

மொன்றியல் பயணத்தில் அவருக்கு உதவியாக இந்து சமயப் பேரவை உதவிச் செயலாளரும் அவரது சீடருமாகிய திரு. க. தனபாலசிங்கமும் கூடவே சென்றிருந்தார்.

'7ஆம் திகதி வியாழக்கிழமை காலை மொன்றியல் அம்மன் கோயிலுக்கு ஞானசுரபி அவர்கள் திரு. தனபாலசிங்கத்துடன்

சென்றார். கோயில் நிர்வாக சபைத் தலைவர் திரு. து. பத்மநாதன் அவர்கள் இருவரையும் வரவேற்றார். அன்றைய தினம் அம்மனுக்கு எண்ணெய்க் காப்பிடும் வைபவம். ஞானசுரபி அவர்கள் எண்ணெய்க் காப்பு மகத்துவம் பற்றி அங்கு கூடியிருந்த அடியவர்களுக்கு விளக்கம் அளித்தார். நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

'அதன்பின் ஞானசுரபி முத்தையா அவர்களை அவர் தங்கியிருக்கப் போகும் விதானையார் திரு. சு. இரத்தினசபாபதி அவர்களின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர்.

'அடுத்தநாள் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் முத்தையா அவர்களுக்குத் தொய்வுநோய் கடுமையாகியதால் ஜுவிஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். எட்டு மணியளவில் முத்தையா அவர்கள் நல்ல சுகம் பெற்றவர்போல் திரு. தனபாலசிங்கத்துடன் உற்சாகமாக உரையாடத் தொடங்கினார். இருப்பினும் மருத்துவமனை அவரை விடுவிப்பதாக இல்லை. 'நீ அம்மன் கோயிலுக்குச் செல்' எனத் தனபாலசிங்கத்தைப் பணிக்கவே, குருவின் சொல்லைத் தட்ட விரும்பாத சீடர் கோயிலுக்குச் சென்று அவரின் உடல் நலத்துக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

'கோயிலிலே கும்பாபிடேகம் நடந்துகொண்டிருந்த அதேவேளை முத்தையா அவர்கள் இறைவனடி எய்திய செய்தி வெளியாயிற்று. செப்டம்பர் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு முத்தான தொண்டர் முத்தையா அவர்களை எல்லாம் வல்ல சிவபுரத்தரசர் தமது ஆட்சியிற் பதவி வகிக்க அழைத்துக் கொண்டார்.'[3]

இறுதிக் கிரியைகளை இந்து சமயப் பேரவை வட யோர்க்கிலுள்ள உயர்நில மயானத்தில் (Highland Memorial Gardens) 16ஆம் திகதி சனிக்கிழமை நடத்தி முடித்தது.

'கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி ஆற்றிய ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மறைவு தமிழுலகுக்கு ஈடுசெய்ய முடியாத

இழப்பாகும். ஒன்ராறியோ மாகாணத்தில் இயங்கும் இந்து சமயப் பேரவை அவரது பணிகளைத் தொடர்ந்து செய்ய உறுதி பூண்டுள்ளமை 'ஆத்மஜோதி நாமம்' இங்கு அடிக்கடி ஒலிக்கும் என்னும் நம்பிக்கையை ஊட்டுகின்றது'[4] என்ற தமிழர் தகவல் கூற்றுக்கு இணங்கப் பேரவை ஆத்மஜோதி அவர்கள் எம்மவர் மத்தியில் தொடர்ந்து வாழத் தக்க பணிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத் தக்கது. மிகவும் முக்கியமாக ஆத்மஜோதி அவர்கள் இங்கு இருந்த காலத்தில் எழுதிய நூல்களை ஒவ்வொன்றாகப் பேரவை வெளியிட்டு வருவதைச் சைவத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவர்.

---

1. ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையின் சில வெளியீடுகளில் பாராட்டு விழா 10.07.1994ல் நடந்தது என்றிருப்பது தவறாகும்.
2. ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் பாராட்டு விழா மலர், 1994.
3. 'என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதர்' – ஞானசுரபி, ஆத்மஜோதி நா.முத்தையா, ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, 1999, முன்னுரை.
4. தமிழர் தகவல், அக்டோபர் 1995.

# 13

## அருள்ஞானி விஷ்ணு தேவானந்த சுவாமி

அருள்ஞானி விஷ்ணுதேவானந்த சுவாமிகள் கனடாவில் ஆற்றிய சமயப் பணிகளை நோக்குமுன் அவரது பின்னணிபற்றியும் அவர் இங்கு வருவதற்கான தெய்வ சித்தம் பற்றியும் சிறிது அறிந்துகொள்வது நல்லது.

சுவாமிகள் 1927ல் இந்தியாவின் கேரள மாநிலத்தில் பிறந்தவர். இந்திய இராணுவத்தின் விமானப் படையில் அவர் பணி புரிந்துகொண்டிருந்த காலத்திற் சுவாமி சிவானந்தரின் கட்டுரை ஒன்றைப் படிக்க நேர்ந்தது. அக் கட்டுரை அவரது வாழ்க்கையில் திருப்புமுனை ஒன்றைத் தோற்றுவித்தது. இராணுவ வீரர் தன்னை மறந்தார்; தன் நாமம் கெட்டார். இராசத குணம் மறைந்தது; சாத்வீகம் தலைப்பட்டது.

சுவாமி சிவானந்த முனிவரைத் தமது குருவாக வரித்துக் கொண்டு சாத்வீகச்சீடர் துறவி பூண்டு குட்டன் சுவாமியானார்.

குட்டன் சுவாமி தமது குருவைத் தரிசிக்கும் வேட்கையால் இரிஷிகேசம் நோக்கிப் புறப்பட்டார். அங்கு 1948ஆம் ஆண்டு பங்குனி மாதம் குட்டன் சுவாமிக்கு விஷ்ணுதேவானந்தா என்னும் துறவிப் பெயரைச் சூட்டித் தமது சீடராகச் சுவாமி சிவானந்தர் ஏற்றுக்கொண்டார்.

பல ஆண்டுகள் இரிஷிகேசத்தில் உள்ள சுவாமி சிவானந்த யோக வேதாந்தக் கல்வி நிலையத்திற் பேராசிரியராக இருந்ததோடு



சுவாமி விஷ்ணு தேவானந்தா
1927 - 1993

சுவாமி சிவானந்தரின் தலைமைச் செயலாளராகவும் விஷ்ணு தேவானந்தா பணிபுரிந்தார்.

1957ஆம் ஆண்டு குருவின் கட்டளையைத் தலைமேற் கொண்டு விஷ்ணுதேவானந்தர் அமெரிக்காவுக்குச் சென்றார். அமெரிக்கா விலிருந்து தமது யோக மார்க்கத்தால் மேலை நாடுகளின் கவனத்தை ஈர்த்தார்.

## கனடாவிற் கண்ட சோதி

சுவாமிகள் ஒருமுறை கனடாவுக்கு மேல் விமானத்திற் சென்று கொண்டிருக்கையில் மொன்றியலுக்கு வடக்கே சோதிப் பிழம்பு ஒன்றைக் கண்டார். அதன்பின் குன்றுகளையும் ஊசியிலைக் காடுகளையும் கொண்ட உலொரன்சியன் மலைத்தொடரில், மொன்றியலுக்கு 75 கி. மீற்றர் வடக்கேயுள்ள வல்மொறின் என்னும் திருவிடத்திற் சிவானந்த ஆச்சிரமத்தை அமைத்தார். அதனைத் தலைமைப் பீடமாகக் கொண்டு பிற நாடுகளிற் பல கிளை நிலையங்களையும் நிறுவி, அவற்றினூடாகத் தமது உலகளாவிய சமயப் பணிகளைத் தொடர்ந்தார்.

சுவாமிகள் ஓர் இராணுவ வீரராக இருந்த காரணத்தால், போரால் நேரக் கூடிய கொடுமைகளை நன்கு அறிந்திருந்தார். அதனாற் சமாதானம் அவரது சமயப் பணியின் உயிர்நாடியாக அமைய நேர்ந்தது.

'மனிதர்களின் உள்ளத்தில் உண்மையான அன்பு குடிகொண்டி ருந்தால், உலகம் முழுவதும் பறவைகள்போல் சுதந்திரமாக வாழலாம். எல்லைகள் நிர்ணயித்துக் குண்டுமாரி பொழியத் தேவையில்லை.'

இவ்விதமான போதனைகளைச் சுவாமிகள் செல்லும் இடம் எங்கும் விதைத்தார்.

போதனைகளுடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை. 1971ஆம் ஆண்டு அமைதியை வேண்டி மத்திய கிழக்குக்கும் வட அயர்லாந்துக்கும் மேலாகப் பறந்து உயிர்களை அழிக்கும் பயங்கரக் குண்டுகளுக்குப் பதிலாக, மலர்க் கொத்துக்களையும்

சமாதானத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களையும் பொழிந்தார்.

15. 11. 1983ல் கிழக்கு யேர்மனியையும் மேற்கு யேர்மனியையும் பிரிக்கும் பேர்லின் சுவருக்கு மேலாக விமானம் ஓட்டிச் சென்று, கிழக்கு யேர்மனியில் இறங்கி செவ்வந்திப் பூக்களைக் கொடுத்துச் சமாதானப் பிச்சை கேட்டார்.

சுவாமிகளுடைய ஒற்றுமை உணர்வும் சமாதானக் கருத்துக்களும் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தன. பறக்கும் சுவாமி என்றும் சமாதானப் பறவை என்றும் அவர் பலவாறாகப் புகழப்பட்டார். அவரது சொல்லும் செயலும் ஆயிரக் கணக்கான மேலைநாட்டவரை இந்துக்கள் ஆக்கின.

வல்மொறின் சிவானந்த ஆச்சிரமத்தில் சுவாமிகள் கோயில் ஒன்றைக் கட்டுவித்தார். மூல மூர்த்தியாக முருகனையும் பரிவாரா மூர்த்திகளாக ஐயப்ப சுவாமி, மூகாம்பிகை, மாரியம்மன் ஆகிய தெய்வங்களையும் பிரதிட்டை செய்வித்தார்.

இவ்விதம் தெய்வீகப் பணிக்கும் உலக சமாதானத்துக்கும் தம்மை அர்ப்பணித்து உலகத்தின் ஞானச் சுடராக விளங்கிய சுவாமி விஷ்ணுதேவானந்தா அவர்கள் 9. 11. 1993ல் சமாதி அடைந்தார்கள். அவரின் பணிகளை அவரது சீடர்கள் தொடர்ந்து செய்துவருகின்றனர்.

சுவாமிகளின் சிவானந்த ஆச்சிரமத்தையும் முருகன் கோயிலையும் கொண்டுள்ள வல்மொறின் கனடாவின் புகழ்பெற்ற திருத்தலமாக விளங்குகின்றது. மேலைக் கதிர்காமம் என்றும் மலைக் கோயில் என்றும் பக்தர்களால் போற்றப்படும் இப் பதி ஒரு யாத்திரைத் தலமாக வளர்ந்து வருகின்றது. ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் இதன் மகோற்சவத்துக்குக் கனடாவின் பல பகுதிகளிலிருந்தும் எம்மவர்கள் யாத்திரை செய்வது இன்று வழக்கமாகிவிட்ட தொன்று.

# 14

## குருவழிபாடு

கனடாவின் சைவ சமய வளர்ச்சியை மதிப்பிடுகையில் அதன் பிரதான ஒரு போக்காகக் குருவழிபாடு விளங்குவதை அவதானிக்க முடிகிறது.

இறைவன் பக்குவம்பெற்ற ஆன்மாக்களுக்குக் குருவடிவில் வந்து அருள்புரியும் இயல்பினன் என்பதனை திருமந்திரம், திருவருட்பயன் முதலாம் சைவ சித்தாந்த நூல்கள் வலியுறுத்துகின்றன.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

என்பது திருமந்திரம்.

மணிவாசகப் பெருமானும் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின்கீழ் குருவடிவில் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட சிவபெருமானை, ‘கோகழி யாண்ட குருமணி’ என்று சிவபுராணத்தில் வாழ்த்துகின்றார்.

அவ்வைப் பிராட்டியார் விநாயகப் பெருமான் குருவாக வந்து தமக்கு அருள் பாலித்ததை விநாயகர் அகவலில் விதந்து கூறுகின்றார்.

அருணகிரிநாதர்,

> உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
> மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
> கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
> குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என்று கந்தரனுபூதியில் வேண்டுவதையும் பார்க்கின்றோம்.

இவ்வித மரபிலே வளர்ந்த குருவழிபாட்டு நெறி கனடாவிலும் சைவத் தமிழரால் நன்கு வளர்க்கப்படுகின்றது.

சைவ சமயத்தை வளர்க்கும் மன்றங்கள் பல நாயன்மார் குருபூசைகளை நடத்தி வருகின்றன. ஆறுமுக நாவலர் பெருமான், குருநாதர் சிவயோக சுவாமிகள் ஆகியோரின் குருபூசைகளும் கொண்டாடப்படுகின்றன.

சிவயோக சுவாமிகளின் குருபூசையைக் கனடாவில் முதன்முதலாகத் தொடக்கி வைத்த பேறு, அவரைக் குருநாதராகக் கொண்டு சமயப்பணி செய்து வந்தவரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமாகிய திருமதி இரத்தினம்மா நவரத்தினம் அவர்களுக்குரியது.

அவர்களின் ஏற்பாட்டில் 1992ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11ஆம் திகதி லாண்ஸ்ரவுண் கூட்டுறவு இல்ல மண்டபத்திற் சிவயோக சுவாமிகளின் குருபூசை கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் திருமதி இரத்தினம்மா நவரத்தினமும் அவரது கணவர் திரு. காசிப்பிள்ளை நவரத்தினமும் ஆங்கிலத்தில் தொகுத்த யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைபற்றிய நூலும் வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நவரத்தினம் குடும்பத்தினர் ஆண்டுதோறும் சிவயோக சுவாமிகள் குருபூசையை நடத்திவரலாயினர்.

19. 03. 1995 ஞாயிற்றுக்கிழமை ஞானசுரபி, ஆத்தமஜோதி முத்தையா அவர்களின் தலைமையிற் கனடா கந்தசாமி கோயிலிற் சிவயோக சுவாமிகளின் குருபூசையை இந்து சமயப் பேரவை

நடத்தியது; தொடர்ந்து நடத்தியும் வருகின்றது.

இந்நாட்களிற் கனடா சைவ சித்தாந்த மன்றம், கனடா சிவதொண்டன் நிலையம் ஆகிய அமைப்புகளும் சிவயோக சுவாமிகளுக்குப் பூசை செய்துவருகின்றன.

## கூட்டுப் பிரார்த்தனை

சிவதொண்டன் நிலையம் ஒவ்வொரு மாதமும் யோகர் சுவாமிகள் மறைந்த ஆயிலிய நட்சத்திரத்தன்று பூசையுடன் கூடிய கூட்டுப் பிரார்த்தனையை நடத்தி வருகின்றது. ஏனைய மன்றங்களும் நாயன்மார்கள் குருபூசை மற்றும் விசேட தினங்களையொட்டிக் கோயில்களிலும் பிற இடங்களிலும் கூட்டுப்பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்துவருகின்றன. எனினும் இவ்வழிபாட்டிற் பலர் ஆர்வம் காட்டாதிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

வீட்டு வழிபாட்டிலும் கூட்டு வழிபாடு சிறந்தது. பக்தி நிலைக்கும் பக்குவ நிலைக்கும் அடியவர்களை ஆயத்தம் செய்யும் பயிற்சியே கூட்டு வழிபாடு. தனிமையாக அல்லது புறம்போக்காக இருப்பதால் வரக்கூடிய விரக்தி மனப்பான்மையைப் போக்க இது உதவுகின்றது. நான் என்னும் முனைப்பை அறுத்து நாம் என்னும் பொது உணர்வைக் கூட்டு வழிபாடு வளர்க்கின்றது. இதனால் நெஞ்சத்து அழுக்காறு நீங்கப்பெற்று நாம் தூய்மை அடைகின்றோம். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்றார் வள்ளுவர் பெருமான்.

மேலும் உறவையும் ஒற்றுமையையும் வளர்க்கும் ஒரு சாதனை ஆகவும் கூட்டு வழிபாடு அமைகின்றது. உற்றார் உறவினரையும் அயலவர், நண்பர்கள் ஆகியோரையும் அடிக்கடி காணவும் உறவை வளர்க்கவும் அவர்களின் இன்ப துன்பங்களிற் பங்கு கொள்ளவும் இவ் வழிபாடு உதவுகின்றது. இதனால் ஒருவர் தமக்காக வழிபடும் நிலைமாறி மற்றவருக்காகவும் வழிபடும் பரந்த மனப்பான்மை வளர்கின்றது. இந்த மனப்பான்மை எம்மைச் சமூக சேவைக்கு இட்டுச் செல்லும் இயல்புடையது.

அத்துடன், சைவ மன்றங்கள் ஒழுங்கு செய்யும் கூட்டு வழிபாடுகளில் திருமுறைகளே பெரிதும் பாடப்படுவதால், தமிழ் மொழி வளரும் வாய்ப்பும் அதிகமாகின்றது. குறிப்பாகத் தேவார திருவாசகங்களைச் சிறுவர்களுக்கு அறிமுகஞ் செய்யவும் சமய அறிவை ஊட்டவும் தமிழை அவர்கள் மத்தியில் வளர்க்கவும் சைவக் கூட்டு வழிபாடு வழிவகுக்கின்றது. இவ்வித நன்மைப்பாடுகளை உணர்வோர் கூட்டு வழிபாடுகளில் தாமும் கலந்துகொள்வதோடு தமது குழந்தைகளையும் ஈடுபடவைப்பர் என்பது உறுதி.

சிலர் கூட்டுப் பிரார்த்தனை என்ற பெயரில் வேற்றுமொழிப் பாடல்களைப் பாடிவருகின்றனர். பாடல்களை விளங்காமற் பாடுவதிற் பயன் ஒன்றும் இல்லை. இதனாலேயே,

**சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்**

என்றார் மணிவாசகப் பெருமானும்.

தமிழிற் கூட்டு வழிபாட்டுக்கு உகந்த பாடல்கள் ஏராளமாக உள்ளன. தமிழுக்குப் பக்தி மொழி என்ற சிறப்புப் பெயர்கூட உள்ளது. அவ்வளவுக்குப் பக்திப் பாடல்கள் அதில் அதிகம். மிகவும் முக்கியமாக அருளாளர்களாற் பாடப்பெற்ற திருமுறைகள் உள்ளன. தெய்வம் தெளிந்தவர்கள், இறையருள் பெற்றவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் சக்தி வாய்ந்தவை. அவற்றை ஓதுவதால் ஆகும் பயன்கள் அளப்பரியன. ஆதலாற் கூட்டு வழிபாடுகளில் திருமுறைகளை ஓதித் தெய்வ அருளைப் பெற்று உய்வோமாக!

## சாயி பாபா வழிபாடு

கூட்டு வழிபாட்டைச் சத்திய சாயி பாபா மிகவும் வலியுறுத்துகின்றார். ‘இறைவனது மகிமையைப் பாடுவது



உங்கள் வாழ்க்கையாக இருக்கட்டும். உங்கள் உயிர் ஒன்றும் அளவுக்குப் பாடுங்கள், உரக்கப் பாடுங்கள்; கூட்டாகப் பாடுங்கள். பேராசை, வெறுப்பு, பொறாமையால் மாசடைந்த சுற்றுப்புறம் அந்தப் புனிதமான அதிர்வுகளால் தூய்மை அடையட்டும்' என்பது அவரின் வாக்கு.[1]

சாயி பாபாவைச் சிவசக்தியின் அவதாரமாகக் காணும் அடியார் கூட்டம் உலகெங்கும் பெருகிவருகின்றது. அவர் ஓர் இந்துவாயினும் உலகத்துச் சமயங்கள் அனைத்தையும் அரவணைத்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் தத்துவத்தைப் போதித்து வருகின்றார். அதனால் அவரது பக்தர்கள் பல இனத்தவர்களாக, பல மொழிகளைப் பேசுபவர்களாக, பல சமயத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாபாவின் பக்தர்கள் சாயி நிலையங்களை அமைத்து வாரத்துக்கு ஒருமுறை(பெரிதும் ஞாயிற்றுக்கிழமைகளில்) இறைவன் புகழைப் பாடுகின்றனர். இதனை அவர்கள் 'சத்சங்கம்' என்பர். சத்சங்கம் என்னும் இந்தச் சமஸ்கிருதச் சொல்லுக்கு 'நல்லோர் கூட்டம்' என்பது பொருள்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று**

என்பது அவ்வைப் பிராட்டியாரின் மூதுரை.

கனடியச் சைவத் தமிழர் பலர் சாயி பக்தர்களாகவுள்ளனர். வாராந்த சத்சங்க வழிபாடுகளில் ஒழுங்காக ஈடுபட்டும் வருகின்றனர். சத்சங்கம் பல இனத்தவரைக் கொண்டிருப்பதால் தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பஜனைகள் நடத்தப்படுகின்றன. சமஸ்கிருத சுலோகங்களும் ஓதப்படுகின்றன.

எனின், சைவச் சாயி பக்தர், முழுவதும் தமிழராக இருக்கும் கூட்டங்களில் தமிழ்ப் பாடல்களை, தேவார திருவாசகங்களைப்

பாடாது பிறமொழிப் பாடல்களைப் பாடிவருவது தமிழைப் புறக்கணிப்பதாக உள்ளது. மேலும் முறையான இறை வழிபாட்டுக்கும் இப் போக்கு உகந்ததாக இல்லை. பஜனை, பாடுகின்றவர்களுக்கு மட்டும் விளங்கினாற் போதாது. இருந்து கேட்பவர்களுக்கும் விளங்குதல் வேண்டும். அப்பொழுதுதான் சத்சங்கத்தால் நன்மையுண்டாகும்.

---

1. சத்தியம், சிவம், சுந்தரம் – பாகம் 4, ஸ்ரீ சத்திய சாயி அறக்கட்டளை (தமிழ் நாடு), 1994, பக். 80.

# 15

# சமய வளர்ச்சிக்குத் துணையாகவுள்ள காரணிகள்

கனடாவிற் சைவ சமயம் துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதற்குப் பல காரணிகள் வாய்ப்பாகவுள்ளன. இவற்றை அடிப்படைக் காரணிகள், பொதுக் காரணிகள் என இருவகைப்படுத்தலாம்.

## அடிப்படைக் காரணிகள்

சைவ மக்கள் வருகையும் தமது சைவப் பாரம்பரியங்களை இங்கு வளர்க்க வேண்டும் என்னும் அவர்களின் ஆர்வமும் கனடாவின் சைவ முயற்சிகளுக்கு மூல காரணங்கள் என்பது சொல்லாமலே போதரும்.

இந்தக் குளிரில் என்ன சைவம் என்று வாழாதிருப்பவர் ஒரு புறமும் சைவத்தை விட்டுக் கிறித்துவத்தைத் தழுவுகின்றவர் மறுபுறமுமாகத் தாம் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்க விரும்பாதவர்கள் மத்தியில் தமது குலதெய்வங்களுக்குப் புலம்பெயர்ந்த நாட்டிலும் கோயில் கட்டிக் கும்பிடல் வேண்டும் என்று கருதும் பக்தர்களின் ஆர்வமும் ஊக்கமும் தலையாயவை.

கோயிலை இங்கு முதன்மையாகக் குறிப்பிடுவதற்குக் காரணம் சைவ வளர்ச்சிக்கு அதுவே ஆதாரம் என்பதனாலாகும்.

மற்றும் ஒன்று மக்கட் செறிவு. கனடாவில் தமிழ் மக்கள்

பட்டினப் பகுதிகளிலேயே அதிகம் வாழ்கின்றனர். 1996ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சில நகரப் புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:[1]

| நகரங்கள் | தமிழர் தொகை |
|---|---|
| மொன்றியல் | 6,490 |
| ஒட்டாவா–கால்டன் | 1,060 |
| ரொறன்ரோ | 46,875 |
| மிசிசாகா | 5,090 |
| பீல் | 5,820 |

மக்கள் அடர்த்தியாக வாழும் இடத்தில் தமக்கு ஒரு கோயிலை அமைக்க விரும்புவது இயல்பே. ஆயினும் இந்து / சைவக் கோயில் வளர்ச்சி வரலாறுகள் இதற்கு எதிர்மறையாகவும் உள்ளன. தமிழ் நாட்டில் இன்றும் பல கோயில்கள் மக்கள் வாழும் இடங்களுக்கு வெகு தூரத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

காவடி (காவு + தடி) வளர்ச்சியும் குடிமனைகளுக்கு அதிக தூரத்தில் கோயில்கள் அமைந்திருந்ததை உணர்த்துகின்றது. பக்தர்கள் பால் பழங்களையும் பிற பொருட்களையும் தடிகளில் கட்டித் தோள்களில் காவிக்கொண்டு செல்லவேண்டிய நிலைக்கு நீண்ட இடைத்தூரமே காரணமாகும்.

தமிழீழத்தில் கதிர்காமமும் தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலும் முறையே மக்கள் குடியிருப்புக்கள் இல்லாத காட்டுப் பகுதியிலும் வெட்டை வெளியிலும் தோற்றுவிக்கப் பெற்றதையும் காண்கின்றோம். ஆதியில் வேட்டுவ குலத்தினர் தமது குலதெய்வமாகிய முருகனைக் கதிர்காமத்தில் வழிபட்டு வந்தனர். பின்னர் முருகனின் அருள் வெளிப்பாடு காரணமாகப் பிற இடங்களிலிருந்தும் அடியவர் அங்கு செல்லத் தொடங்கினர். குடிமனைகள் இல்லாத தில்லையம்பலத்திற் பிள்ளையார் வழிபாடு இடையர்களால் தொடங்கப்பட்டது.

கனடாவிலும் முதன்முதலாக ஆரம்பிக்கப்பெற்ற பிள்ளையார் கோயிலுக்கான நிலையம் இறிச்மண் ஹில் என்னும் இடத்தில் தெரிவுசெய்யப்பட்டது. இறிச்மண் ஹில் இந்து சைவ மக்கள் செறிவாக இருக்கும் ரொறன்ரோ நகரத்துக்கு அப்பால் அமைந்துள்ளது. ரொறன்ரோ மாநகரத்துக்கு வெளியே காணி மலிவாகப் பெறக்கூடியதாக இருந்தமையே இத் தெரிவுக்கான பிரதான காரணமாகும்.

எனினும் இன்று இந்த நிலைமை மாறிவிட்டதைப் பார்க்கின்றோம். மூன்று கோயில்களின் நிர்வாகங்கள் (ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம், கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயம், கனடா கந்தசுவாமி ஆலயம்) விலையையும் பாராது சைவ மக்கள் செறிவாகவுள்ள ரொறன்ரோ மாநகரத்துக்குட்பட்ட பகுதிகளிலேயே காணிகளை வாங்கிக் கோயில்களைக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## பொதுக் காரணிகள்

**1. இட வசதி:** மாநகரத்துப் பகுதிகளிலேயே கோயில்களுக்குக் காணிகள் கிடைக்கின்றனவென்றால் கனடாவிற் காணி நில வளத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கனடா உலகத்திலேயே இரண்டாவது பெரிய நாடு. மக்கள் தொகை 28,846,761 மட்டுமே. [2]

அதனாற் பாவிக்கப்படாத நிலப்பரப்பு அதிகம். அவற்றின் பெரும் பகுதி பாவிக்கமுடியாத வட பகுதிக் குளிர் வலயத்துள் அமைந்திருப்பதால் பாவிக்கக் கூடிய நிலப் பரப்புகளைக் கனடா சிறந்தமுறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தி வருகின்றது.

வாய்ப்பான காலநிலை நிலவும் தென் பகுதிகளிலேயே (49 பாகை வடக்கு அகலக்கோட்டை அண்டிய கனடா, ஐக்கிய அமெரிக்க எல்லைப் பகுதிகளிலேயே) மக்கட் செறிவு அதிகமாக உள்ளது. இப்பகுதிகளிற் காணி விலை அதிகம். எனினும் வாங்கக் கூடிய அளவுக்கு நிலங்கள் உள்ளன.

அத்துடன் கட்டிட வசதிகளும் அதிகம். எமது கோயில்கள் பல தற்காலிகமான கட்டிடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது நிரந்தர கோயில்களாக விளங்குபவையும் தொடக்கத்தில் வாடகைக் கட்டிடங்களிலேயே இருந்தன. (இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயில் மட்டும் இதற்கு விதிவிலக்கு) நினைத்த அளவிலேயே வாடகைக்கு வசதியான கட்டிடங்களைப் பெறக்கூடிய இந்த வாய்ப்பினால் மக்கள் தமது வழிபாட்டுத் தேவையை எளிதிலே நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.

**2. நிதி வசதி:** தமிழ்க் கனடியரின் பொருளாதாரம் வெளிநாட்டவர் நினைப்பதுபோல் ஆகா ஓகோ என்னும் அளவுக்கு இல்லை. ஒப்பீட்டளவில் பெரும்பான்மையோரது வருமானம் சராசரிக்குக் குறைவாகவே உள்ளது. இருப்பினும் திருப்பணி என்று வரும்போது பார்த்துப் பாராமல் வழங்கும் தெய்வ மனம் சைவத் தமிழரிடையே தாராளமாகவே உள்ளது.

அத்துடன் காணிகளை வாங்கவும் கோயில்களைக் கட்டவும் வங்கிகளில் கடன் பெறக்கூடிய வசதியும் முக்கியமான ஒரு காரணியாகும்.

**3. இறக்குமதி வாய்ப்பு:** விக்கிரகங்கள் முதலாக திருவாசி, தூப தீபக் கருவிகள், கொடி, குடை, ஆலவட்டம், சாமரை, விசிறி மற்றும் கிரியைகளுக்குரிய பொருட்கள் முதலியவற்றை இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்புக்களும் கனடாவிற் சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன.

**4. போக்குவரத்து:** நாம் உலகத்திலேயே மிகச் சிறந்த போக்குவரத்து வசதியுள்ள ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கோயில் திருப்பணிகளைத் துரிதப்படுத்துவதில் தடையற்ற போக்குவரத்து வசதிகளுக்கும் பெரும் பங்கு உண்டு.

கோயில்களுக்குத் தேவையான இறக்குமதிப் பொருட்களைக் கொண்டு செல்லவும் விநியோகிக்கவும் கோயில்களுக்கு விரைவாகச் சென்று வரவும் கனடாவின் போக்குவரத்து வசதிகள்

பெரிதும் உதவுகின்றன. வாகன வசதி இல்லாத மாநகரவாசிகள் மாநகரத்துப் பேருந்துச் சேவையைப் பயன்படுத்தித் தமக்குக் கிட்டவுள்ள கோயில்களுக்குச் செல்கின்றனர். ரொறன்ரோவிலாயினும் மொன்றியலிலாயினும் ஒரு மணித்தியாலத்துக்குள் நகரத்தின் பெரும்பாலான பகுதிகளை அடையக் கூடிய பேருந்து அகழ்வழிச் சேவைகள் நடத்தப்படுகின்றன.

**5. அச்சக வசதி:** திருவிழா மற்றும் சமய நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தற் பிரசுரங்களை வெளியிடவும் சமய நூல்களைப் பதிப்பிக்கவும் வசதிகள் உள்ளன. தமிழர் மத்தியிலேயே அச்சுத் தொழில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. கணனி மூலம் எழுத்து அமைப்புச் செய்யும் கலை வீட்டுத் தொழிலாகிவிட்டது. வடிவமைப்பு, அட்டைப்படங்கள் வரைதல் முதலாய நூலமைப்புக்கு வேண்டிய நுண்கலைகளில் வல்லவர்களும் எம்மவர் மத்தியில் பலர் உள்ளனர்.

**6. தொடர்புச் சாதனங்கள்:** சைவ சமய வளர்ச்சியில் தமிழர்களால் நடத்தப்படும் தொடர்புச் சாதனங்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

கனடாவிற் பல தமிழ்ச் செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன. உலகத்தமிழர், செந்தாமரை, ஈழநாடு, உதயன், நம்நாடு, தமிழர் செந்தாரை, முழக்கம், விளம்பரம், முரசொலி, ஈழமுரசு முதலிய தமிழ்ப் பத்திரிகைகளும் Tamil Guardian International என்னும் ஆங்கிலச் செய்தி இதழும் தமிழர் தகவல், தமிழ் மகள் போன்ற சஞ்சிகைகளும் அவ்வப்போது கோயில் திருவிழாக்கள் மற்றும் சமய நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிடுவதோடு சமயக் கட்டுரைகளைப் பிரசுரித்துச் சமய அறிவைப் பரப்பும் பணியினையும் செய்துவருகின்றன.

இவற்றோடு சைவ வளர்ச்சிக் கென்றே வெளியிடப்படும் அன்புநெறி, இந்து தீபம், கனடா இந்து, சைவ நீதி, மதம், ஆத்மஜோதி முதலியனவும் சமய அறிவைப் புகட்டுவதில் பெரும் பங்கினை ஆற்றிவருகின்றன.

கீதவாணி, கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், கனடியத்

தமிழ் வானொலி, சர்வதேசத் தமிழ் வானொலி, தமிழ் அலை, தமிழர் குரல், தமிழ்ச்சோலை, உதயம் ஆகிய வானொலிகளும் கலாபம், T.V. Ceylon, T.V. Tamil Inc. ஆகிய தொலைக்காட்சிச் சேவைகளும் சமயச் செய்திகளை அவ்வப்போது அறிவிப்பதற்கும் சமய அறிவை வளர்ப்பதற்கும் உதவி வருகின்றன.

**7. கனடியச் சுதந்திரம்:** சைவ சமய வளர்ச்சிக்குக் கனடாவில் நிலவிவரும் சுதந்திரச் சூழ்நிலையும் மிகவும் முக்கியமான ஒரு காரணியாகும். கனடா மனித சுதந்திரத்துக்குப் பெருமதிப்பு அளிக்கும் ஓர் உன்னதமான மக்களாட்சி நாடு. தனி மனித சுதந்திரமும் சமூகப் பாரம்பரியங்களைக் காக்கும் உரிமைகளும் இங்கு எழுத்தளவிலும் சொல்லளவிலும் பேணப்படுவதோடு நடைமுறையிலும் மிகக் கவனமாகச் செயற்படுத்தப்படுகின்றன.

கனடாவின் உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றிய சாசனம் ஒவ்வொரு கனடியப் பிரசைக்குமுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் அவற்றின் எல்லைகளையும் கடப்பாடுகளையும் விளக்குகின்றது.

விதி 2 அடிப்படைச் சுதந்திரங்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது:

Everyone has the following fundamental freedoms: (a) freedom of conscience and religion; (b) freedom of thought, belief, opinion and expression, including freedom of the press and other media of communication; ( c) freedom of peaceful assembly; and (d) freedom of association.

கனடாவில் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய உத்தியோக மொழிகள் உட்பட மொத்தம் 68 மொழிகளை வீட்டு மொழிகளாகப் பேசுகின்ற[3] வெவ்வேறு சமூகங்கள் ஒரு குடும்பம் போன்று கனடிய மக்களாக வாழ்கின்றன.

இச் சமூகங்கள் மொழியால் மட்டுமன்றி வேறு விதங்களிலும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுபவை. இப் பல் கலாச்சாரப் பாங்கும்

கனடாவிற் பாதுகாக்கப்படுகின்றது. உரிமைகளும் சுதந்திரங்களும்பற்றிய சாசனத்தின் விதி 15.(1) சம உரிமைப்பாடுகளைப் பின்வருமாறு விளக்குகின்றது:

Every individual is equal before and under the law and has the right to the equal protection and equal benefit of the law without discrimination and, in particular, without discrimination based on race, national or ethnic origin, colour, religion, sex, age or mental or physical disability.

இவ்விதமான உரிமைப்பாடுகளாலும் சுதந்திரங்களாலும் கனடியச் சைவ மக்கள் எளிதாகத் தங்கள் சமய நம்பிக்கையை வளர்க்கவும் அதனைச் செயற்படுத்தவும் முடிகிறது.

உரிமைப்பாடுகளையும் சுதந்திரங்களையும் செவ்வனே அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை இங்குள்ள மக்களின் மனப்பான்மைகளினால் நிலை நிறுத்தப்படுகின்றது. பல் கலாச்சாரச் சூழ்நிலைக்குக் கனடிய மக்கள் இக்காலத்தில் நன்கு பழக்கப்பட்டு விட்டார்கள். அவர்களின் சகிப்புத் தன்மையும் பரந்த, தாராள மனப்பான்மையும்கூட எமது சமய வளர்ச்சிக்குச் சுகம் செய்கின்றன.

உண்மையில், கனடாவில் உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றிய சாசனம் 17–04–1987ல் சட்டமாவதற்கும் கனடிய மக்களின் பல்லின உறவே காரணமாகும்.

1950களில் இந்துக்கள் கோயில் கட்டுவதற்குச் சட்டரீதியான அனுமதி பெறவேண்டியிருந்தது. ஏனெனில் சட்டத்திற் சமயம் என்ற சொல் இந்திய சமயங்கள் எதனையும் அக்காலத்தில் உள்ளடக்கவில்லை.

---

1 - 3. Statistics Canada: Census 1996

# 16

# இடர்ப்பாடுகளும் கடப்பாடுகளும்

## 1. நேரப் போராட்டம்

எவ்வளவுதான் வசதிகள் இருந்தாலும் கோயிலுக்குச் சென்று கும்பிடுவதற்கு நேரம் இல்லாத வில்லங்கம் ஒன்று கனடாவிற் பலருக்கு உண்டு. பகல் வேலை, மாலை வேலை, இரவு வேலை என்னும் இந்தச் சுழற்சியில் வீட்டு வழிபாடே வசதியாகவுள்ளது. பலர் சனி, ஞாயிறிலும் வேலை அல்லது பகுதிநேர வேலை பார்க்கின்றார்கள். அதனால் வீட்டில் பூசை அறை வைத்துத் தங்கள் குலதெய்வங்களை வழிபடுவதில் அமைதி காணவேண்டிய நிலையில் அவர்கள் இருக்கின்றனர்.

கோயிலுக்குச் சென்றாலும் அங்கு ஆறுதலாகக் கும்பிடுவற்கோ நின்று பூசையைக் கண்டு செல்வதற்கோ நேரம் விட்டு வைப்பதில்லை. அவ்வளவுக்கு நேரப் பிரச்சனை சிந்தனையைப் பாரப்படுத்தவல்லது.

இத்தகைய சூழ்நிலையில் கோயில்களிற் பூசைக்கு அதிக நேரம் எடுக்கின்றார்கள் என்ற முறைப்பாடும் எழுந்துள்ளது. அதிக பரிவார மூர்த்திகள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள இறிச்மண் ஹில் பிள்ளையார் கோயிலில் இந் நிலைமை இருக்கவே செய்கின்றது.

இதற்கு ஒரு தீர்வு என்னவெனில், அதிக நேரம் நிற்க முடியாதவர் தங்கள் குல தெய்வங்களின் பூசையை மட்டும் கண்டுகொண்டு தங்கள் அலுவல்களுக்குச் செல்வது. அதன் பொருட்டு எந்தெந்தத் தெய்வங்களுக்கு எந்தெந்த நேரத்தில் பூசை நடக்கும்

என்பதனை முன்கூட்டியே அறிந்து வைத்துக் கொண்டால் வசதியாக இருக்கும்.

மற்றைய கோயில்களிற் பூசை நேரம் பிரச்சனையாக இருப்பதில்லை. எல்லாக் கோயில்களிலுமே வழமையாகக் குறித்த நேரத்தில் பூசைகள் நடத்தப்படுகின்றன.

## 2. குளிரான காலநிலை

கனடாவின் தென் பகுதி இடைவெப்ப வலயத்திலும் வட பகுதி குளிர் வலயத்திலும் அமைந்துள்ளன. இங்குள்ள கோடை, இலையுதிர், குளிர், இலைதளிர்(வசந்தம்) ஆகிய நான்கு பருவ காலங்களிலும் குளிர் காலமே கடுமையானது. மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் சில சமயம் வெப்பம் $-30^0$C இலிருந்து $-35^0$C என்று விழுந்து செயற்பாடுகளை உறைய வைக்கும் நிலைமைகளும் உண்டு.

தமிழ் மக்கள் வெப்ப வலயக் காலநிலைக்குப் பழக்கப்பட்டவர்கள். அதனாற் குளிர் பலருக்கு ஒத்து வருவதில்லை. எனினும் திருவெம்பாவை, சிவராத்திரி போன்ற பிரதான தினங்கள் குளிர் காலத்தில் வருவதால், கோயில்களுக்கு எப்படியும் செல்ல வேண்டும் என்னும் பக்தி வைராக்கியம் சைவர்களைக் கோயில்களுக்குச் செல்ல வைக்கின்றது. அதனால், கோயில்களுக்கு முடிந்தவரை சென்று வணங்கும் நியமத்துக்கு இக் காலத்திற் பலரும் பழக்கப்பட்டு விட்டார்கள். பிற சமய நிகழ்ச்சிகள் குளிர் காலத்தில் நடப்பது குறைவு; நடக்குமாயின் அவற்றைத் தவிர்க்கவே செய்கின்றனர்.

குளிர் நிலைமைகளைச் சமாளிக்கும் வகையில் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் இயல்பாகவே ஏற்பட்டு வருகின்றன. குளிர் காலத்திற் கிட்டவுள்ள கோயில்களையே மக்கள் அதிகம் நாடுகின்றனர். கடும் விரத அனுட்டானங்களையும் குறைக்கின்றனர் அல்லது தவிர்க்கின்றனர். கோயில் உற்சவங்களும் குளிர் அல்லாத பருவ காலங்களிலேயே பெரிதும் நடைபெறுகின்றன.

## 3. மதமாற்றம்

கனடாவிற் சிலர் சைவத்திலிருந்து கிறித்துவ சமயத்துக்கு மாறிச் செல்கின்றனர். மாறிச் செல்வதில் தவறு ஒன்றும் இல்லை. கிறித்தவர்களுந்தாம் சைவத்துக்கும் ஹரே கிருஷ்ணா இயக்கத்துக்கும் மாறிக்கொண்டிருக்கின்றனர்.

மத நம்பிக்கை என்பது ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரம். ஆனால் மாறிச் செல்கின்றவர்கள் சைவத்தைக் குறைகூறிக் கொண்டு செல்வதுதான் தவறாகவுள்ளது. அது அவர்களின் அறியாமையையே எடுத்துக் காட்டுகின்றது. (பார்க்க: பின்னிணைப்பு – 2.)

கிறித்தவ சமயத்தில் இருந்து சைவத்துக்கு வருகின்றவர் கிறித்தவ சமயத்தைத் தூற்றிப் பேசுவதில்லை. ஆனாற் சைவத்தில் இந்து சமயத்திலிருந்து கிறித்தவ சமயத்திற்குச் செல்கின்றவர்கள் தமது சமயத்தைப் பழித்துப் பேசிவருகின்றனர். அவர்களை அவ்விதம் பேச வைப்பவர்கள் அவர்களைச் சமய மாற்றம் செய்யும் கிறித்தவர்களே.

சைவர்களைச் சமய மாற்றம் செய்ய முயல்கின்ற கிறித்தவர்கள் (1) இந்து சமயம் ஆயிரம் தெய்வங்களைப் போற்றுகின்றது, (2) இந்து சமயம் பொம்மைகளை வணங்குகின்றது, (3) இந்து சமயத்திற் கட்டுக் கதைகள் அதிகம், (4) இந்து சமயம் மூட நம்பிக்கைச் சமயம் (5) கோயில்கள் சுத்தம் இல்லை என்றெல்லாம் சொல்லி வருகின்றார்கள்.

## 4. திட்டமற்ற முயற்சிகள்

இவ்வித பிரசாரங்களுக்கு நாமும் ஒருவகையிற் காரணமாகவே உள்ளோம். எமது சமய முயற்சிகள் குழு சார்ந்தவையாகவும் ஒன்றுக் கொன்று முரண்படுபவையாகவும் பொதுவாக்கங் கருதித் திட்டமிடப்படாதவையாகவும் கனடியச் சூழலுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அமையாதனவாகவும் உள்ளன.

மிகவும் முக்கியமாக, வருடப் பிறப்பு, ஆடி அமாவாசை, பிற விரத நாட்கள், நன்னிமித்தங்கள் முதலாய பொது விடயங்களில்

வெவ்வேறான கால நேரங்களைக் கோயில்கள் பின்பற்றிச் சைவத் தமிழர் மத்தியில் குழப்பத்தையும் போட்டிகளையும் ஒற்றுமையீனத்தையும் சைவ அனுட்டானங்களில் நம்பிக்கை யீனத்தையும் ஏற்படுத்துகின்றன என்னும் குற்றச்சாட்டு வலுப்பெற்று வருகின்றது.

இதற்குரிய பிரதான காரணம் கோயில்கள் வெவ்வேறு பஞ்சாங்கங்களைப் பின்பற்றுவதேயாகும். இவ்விடயத்தில் சைவ சமய நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு முடிவை விரைவாக எடுப்பது சமய வளர்ச்சிக்கு அவசியமாகின்றது. இதுபற்றி ஏற்கனவே பல ஆர்வலர்கள் குரல் கொடுத்திருக்கின்றார்கள்.[1]

விரத நாட்கள்பற்றிய கணிப்பில் ஒற்றுமை காணும் நோக்குடன் இந்து சமயப் பேரவை பஞ்சாங்க விற்பன்னர்களைக் கூட்டி ஆலோசனை ஒன்றை நடத்தியது. அந்த முயற்சி பயன் அளிக்கவில்லை. இனி, இவ்விடயத்திற் கோயில் நிர்வாகங்கள் ஒற்றுமைப்பட்டாலேயன்றி வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

மதமாற்றம் ஒருபுறம் இருக்க, மதம் மாறாத எமது இளஞ் சந்ததியைத் தள்ளிவைக்கும் குழப்பங்களை நாம் தோற்று விக்கலாகாது. அது நமது தலையில் நாமே மண்ணை அள்ளிப் போடுவதை ஒத்தது. விளைவு: வருங்காலத்திற் கோயில்களுக்கு வழிபடவருவோர் தொகை குறையலாம் என்னும் கவலை.

## 5. பெற்றோர் கடமை

விசேட சமய தினங்கள்பற்றி எம்மிடையேயுள்ள குழப்பங்களாலும் ஒற்றுமையீனத்தாலும் பிற சமயத்தவரும் மதம் மாறியவரும் எமது சமயத்தைப்பற்றிக் கூறும் பழிப்புரைகள் எல்லாம் சரிபோலவே எமது இளஞ் சந்ததியினருக்குத் தோன்றக்கூடும்.

பழிப்புரைகளாற் சைவ சமயம் தாழ்வடையப் போவதில்லை. ஆனாற் பிள்ளைகளின் குழப்பங்களைத் தீர்த்து, நம்பிக்கை அளிக்கும் வகையில் எமது சமயத்தின் மேன்மையை அவர்களுக்கு உணர்த்துவது எமது கடமை. இவ்விடயத்தில் பெருங் கவனம் செலுத்த வேண்டியவர்கள் வேறு யாருமல்லர் – பெற்றோர்களே! ஆனால் அவர்கள் அதிக அக்கறை எடுக்காமல் இருப்பது ஒரு குறைபாடு.

தமது பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை அளிக்கும் அறிவும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு இல்லை. விளக்கங்களை அளிக்கவல்ல பள்ளிக் கூடங்கள், கூட்டங்கள், சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள் என்பன நடந்தாலும் அவற்றுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லப் பெற்றோருக்கு ஆர்வம் இருப்பதில்லை. ஆர்வம் இருந்தாலும் நேரம் விடுவதில்லை.

சமயத்திற் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைப்பதிலும் அதன் தத்துவங்களிற் சிலவற்றையாவது விளங்கிக்கொண்டு பின்பற்றுவது மேன்மை தரும். அத்தகைய விளக்கம் கனடா போன்ற ஒரு விருத்தியடைந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் எமக்கு மிகவும் அவசியம்.

கனடாவில் எமது அடுத்த சந்ததி கண்மூடித்தனமாகச் சமயத்தைப் பின்பற்றும் என்று சொல்வதற்கில்லை. எமது சமயம் அன்பின் அடிப்படையில் எழுந்த ஒரு வாழ்க்கை முறை. ஆழ்ந்து அகன்ற அறிவு விசாரணைகளின் விளைவாக வளர்ந்த ஒரு பரந்த தத்துவத் துறை. அதன் தத்துவங்களை எமது இளஞ் சந்ததியினருக்கு இலகுவான முறையில் அறிவு பூர்வமாக விளக்க வேண்டியது எமது பொறுப்பு.

சமயத்தை அடுத்த சந்ததிக்குப் பொறுப்புடன் வழங்க வேண்டும் என்னும் கடமையுணர்வுடன் பல நிறுவனங்கள் சமய வகுப்புகளை நடத்தி வருகின்றன. பல அறிஞர்கள் நூல்களை வெளியிட்டுள்ளனர். பத்திரிகைகள் விளக்கக் கட்டுரைகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன. தரமான சமயப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்தும் வழிவகைகளைப் பெற்றோர்கள் ஆர்வத்துடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 6. சைவ சமய பீடம்

எமது சமயத்துக்கு ஓர் ஆணைச் சபை அல்லது அதிகார பீடம் அவசியம் வேண்டும். வளர்ச்சிக்கு அணியாவது ஒழுங்கு முறை. சில ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கவும் நடைமுறைப் படுத்தவும் சமய பீடம் உதவியாக இருக்கும். அரசாங்கத்திட

மிருந்து உதவிகள் பெறவும் சைவர்கள் பிரச்சனைகள் தொடர்பாகவோ விசேட விழாக்கள், கொண்டாட்டங்கள் பற்றியோ ஏகோபித்த, அதிகாரபூர்வமான அறிக்கைகள் விடவும் இத்தகைய பீடம் ஒன்று இன்றியமையாதது.

அந்தணர்கள், கோயில் நிர்வாகிகள், பஞ்சாங்க வல்லுநர்கள் மற்றும் சைவப் பெரியார்களைப் பிரதிநிதித்துவஞ் செய்யும் வகையில் இப் பீடம் அமைதல் வேண்டும். சைவ வளர்ச்சி குறித்த நடவடிக்கைகளை எடுக்குங் கடமையும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரமும் சைவ மக்கள் நல் வாழ்வுக்கு உழைக்கும் பொறுப்பும் இப்பீடத்துக்கு இருத்தல் வேண்டும்.

இதன்மூலம் (1) வாக்கிய, கணித பஞ்சாங்கங்கள் தோற்றுவிக்கும் குழப்பங்களைத் தீர்த்தல், (2) கனடியச் சூழல், வாழ்க்கைமுறை என்பவற்றுக்குத் தக, பூசை முறைகளிற் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்தல், (3) சைவ சமயத்தவர் பிற சமயங்களைத் தழுவுதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை எடுத்தல், (4) சைவ இளைஞர் தொண்டர் சபை ஒன்றினை அமைத்தல், (5) சமூகத் தொண்டுகள் செய்தல், (6) சைவ சமயக் கற்பித்தலுக்குப் பொருத்தமான பாடத்திட்டங்களை அமைத்தல், பாட நூல்களைத் தயாரித்தல், (7) தகுதி வாய்ந்த சமய ஆசிரியர்களைத் தெரிவு செய்தல், (8) சைவ சமயக் கற்பித்தலை மேற்பார்வை செய்தல் (9) பரீட்சைகள் நடத்திச் சான்றிதழ்கள் வழங்குதல், (10) சமய மாநாடுகளை நடத்தல் போன்ற செயல் திட்டங்களையும் பிற சைவ வளர்ச்சி குறித்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஒற்றுமையுடன் செயற்படுத்தினால் கனடாவிற் சைவ சமயம் மேலும் வளர்ந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

## நிறைவுரை

சைவ சமய வளர்ச்சி என்பது கோயில் வழிபாடு, கிரியைகள், திருவிழாக்கள், சமய விழாக்கள், சமயம் கற்பித்தல் முதலாய செயற்பாடுகளோடு நின்றுவிடுவதொன்றல்ல. சைவ வாழ்க்கை வாழ்வதே உண்மையான வளர்ச்சியாகும். சைவ வாழ்க்கை என்பது நீதி வழுவா நெறிமுறையில் நிற்றல்.

சைவ நீதிக்கு அடிப்படையாவது அன்பு. 'அன்பே சிவம்' என்றார் திருமூலநாயனார். அன்புக்கு ஆதாரமாவது உள்ளத் தூய்மை. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்' என்றார் வள்ளுவர் பெருமான். மாசுகளாவன அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலியன.

ஆக, உள்ளத் தூய்மையே சைவ வாழ்க்கையின் முதற் படி. தூய உள்ளத்தில் வளரும் அன்பே சைவ அன்பு. எல்லா உயிர்களிடத்தும் அன்பு வைத்து, அவற்றுக்குத் தீங்கு செய்யாது ஒழுகுதல், உதவுதல் சைவ நீதி.

சைவ நீதியில் யாவரும் சமம். அதிலே ஏற்றத் தாழ்வுக்கோ போட்டி பொறாமைக்கோ இடமில்லை. அன்புடையவாராய் இருத்தல், எல்லோரிடத்தும் சிவத்தைக் காணுதல், உயிர்களுக்கு ஊறு செய்யாதிருத்தல், பிறர் துன்பங்களைத் துடைத்தல், ஒற்றுமை பேணுதல், உறவை வளர்த்தல், அமைதிக்கு உழைத்தல் முதலியன சைவ வாழ்க்கையின் இன்றியமையாத இயல்புகள்.

இவ் வியல்புகளோடு கூடிய வாழ்க்கையை வாழ்வதன் மூலம் 'மேன்மைகொள் சைவ நீதியை' இந்த மண்ணில் விளங்கச் செய்வோமாக!

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்கக் குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

—கந்தபுராணம்

---

1. கௌசிகர் – பல பத்திரிகைகளில்
சிவப்பிரகாசம் – தாயகம், 13. 08. 93, பக். 10
சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் – தமிழர் தகவல், மூன்றாவது ஆண்டு மலர், பெப்பிரவரி 1994, பக். 16

## துணை நூல்கள்


கஸ்தூரி, சத்தியம், சிவம், சுந்தரம் – பாகம் 4
ஸ்ரீ சத்திய சாயி அறக்கட்டளை (தமிழ்நாடு), *1994*

முத்தையா, நா என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதர்,
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, *1999*

வசந்தா நடராஜன்(திருமதி), ஈழத்தமிழர் வரலாறு
வசந்தம் பதிப்பகம்
வெஸ்ரன், ஒன்ராரியோ, *1999*

Coogan, Micheal D., World Religions
Duncan Baird Publishers,
London, 1998

Marshall, J., Mohanjodaro and the Indus Civilization (Vol.1, P.VIII)
Lond. 1931

Singaravelu, C.N., Glimpses of Saiva Siddhanta
Saiva Siddhanta Perumanram
Madras, 1992

Sivaya Subramuniyaswami, Satguru, Dancing with Siva
Himalayan Academy, India.
USA, 1999

Sivaya Subramuniyaswami, Satguru Weaver's Wisdom
Himalayan Academy, India.
USA, 1999

Statistics Canada Census 1996 & Census 1986

## உதவிய சஞ்சிகைகள்/மலர்கள்

அருள்மிகு திருமுருகன் கோயில் குடமுழுக்கு விழா மலர்,1995
– கியூபெக் சைவமகா சபை

அல்பேட்டா மகா கணபதி சங்கம், ஒன்ராறியோ கிளை, கலை விழா மலர், 1994
(எட்மன்ட்டணில் விநாயகர் ஆலயம் – சின்னையா சிவநேசன்)

அன்புநெறி, மலர் 2, இதழ் 12, 1998,
– சைவ சித்தாந்த மன்றம், கனடா

ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் பாராட்டு விழா மலர், 1994,
– இந்து சமயப் பேரவை

இந்து தீபம், அகல்: 1, சுடர் 4 – குமரன் பதிப்பகம், மொன்றியல்

இந்து தீபம், மார்கழி 1996, – குமரன் பதிப்பகம், ஸ்காபரோ

ஏழாவது உலக சைவ மாநாடு – கனடா, சிறப்பு மலர், 1999,
– உலகசைவப் பேரவை/கனடா இந்து மாமன்றம்

கனடா இந்து Spring 1999, – ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா ஆலயம்

சிவயோக மலர், 1997, – சிவதொண்டன் நிலையம், கனடா

சேக்கிழார் உலகப் பெருவிழா, மலர்க் களஞ்சியம்,
– குன்றத்தூர் தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் 1994

சைவநீதி, தைப்பொங்கல் மலர், 1997, – கனடா இந்து மாமன்றம்

தமிழர் தகவல், பெப்ரவரி 1994, அக்டோபர் 1995, செப்டெம்பர் 1999
– தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு, அகிலன் அசோசியேற்ஸ்

தாயகம் 10.08.93, – ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனம்

நம்நாடு, யூலாய் 15, 1999, 'கனடா கந்தசாமி கோயில் இசை நிகழ்ச்சி'
– ஒரு விமர்சனம் – பேராசிரியர் ச. முத்துலிங்கம்

பொங்கல் விழா மலர், 1995, – கியூபெக் சைவ மகாசபை

Maha Vimana Kumbabishekam, Souvenir Issue, 1992,
-Hindu Temple Society of Canada.

தமிழர் தகவல், ஒன்பதாவது ஆண்டு மலர், பெப்ரவரி 2000,
– தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு, அகிலன் அசோசியேற்ஸ்

பின்னிணைப்பு - 1

# Sri Lanka comes to D. D. O.

## 4,000 adherents of Saiva Hinduism celebrate annual festival at temple

**ERIC SIBLIN**
The Gazette, Montreal

The helicopter swooped low, showering rose petals onto a chariot that was transporting the Hindu deity.

Bright saris fluttered in the chopper wind, children shrieked with delight and devotees clasped their hands in prayer .
Dancer in the grip of ecstasy raised peacock feathers to the sky. Barechested supplicants rolled their bodies on the ground where coconuts had been crushed, Drummers kept trance-time for horn players occupied with frenetic melodies.

Blink and you were in wonderous Sri Lanka not West Island Dollar des Ormeaux (D.D.O.) where adherents of Saiva Hinduism celebrated an annual festival at their temple yesterday.

"Our goal is to become one with the Supreme Being" said Lukshmi Perampalamoorthy, a 17 year old student from Pierrefonds who was wearing a purple sari for the occasion. "It is devotion to god, The Supreme Being, to show my love for him".

About 4000 people, mostly Tamils with Sri Lankan roots, gathered at the Tiru Murugan Temple as a statue of the deity Lord Muruga was brought outside and placed in a chariot, The vehicle, resembling a gazebo on wheels., was then hauled around the temple by a few dozed men using a rope.

As the chariot proceeded it was trailed by a barefoot crowd that chanted Hindu prayers, burned camphor incense, rattled tambourines and daubed white holy ashes (cow dung) on their foreheads.

By the time the deity reached the back of modest brick temple, Ceylonese treats, bananas, watermelon and plums were being passed

around and a carnivalesque atmosphere took over.

The helicopter, used for the first time this year, brought the festivities to high point with a modern method of fulfilling an ancient ritual: dropping red rose petals on the chariot bearing the statue of Lord Murugan.

Yet the celebratory mood was offset by some painful displays of ascetic purification, The kavady dancers with peacock feathers were carrying wooden arches that pierced their backs with metal hooks, Shirtless men followed the procession at ground-level by rolling their bodies every inch of the way.

And the most conspicuous act of self –flagellation involved a man suspended above a 4X4 vehicle with metal cables digging into his flesh. The man was hanging-swimming in midair, actually-from what looked like a diving-board fastened to the roof of the vehicle. He did not appear unhappy, and was rhythmically waving a pink handkerchief at the end of a stick while Tamil freedom-fighter songs blared from the sound system.

"He really believes in it." Said one bystander.
"He doesn't feel the pain."

Even an energetic onslaught against coconuts-in which men smashed large numbers of the fruit against a stone, sending shards flying and spraying the milk into the crowd- was described as a puring activity. "We become sweet and pure as the coconut water, " explained Ravi Suntharamoorthy, vice president of the Saiva Mission of Quebec, which runs the temple

The annual festival, which began on August 13, 1999 lasts for 12 days, during which time abstention from meat, alcohol and smoking is required of worshippers. Among the events is the Festival of the Sacred Dip. Planned for today, in which the deity is placed in the middle of a pond, bathed and submerged three times.

"We don't want to let this die," said Sunthaaramoorthy, "even though we're in North America."

- August 22, 1999

பின்னிணைப்பு - 2

# சமயம் மாறிய சாமியாரே!

சாமியாரே,
உங்கள் சமயத்துக்கு
என்னை மாற்றவேண்டுமாயின்
உங்கள் சமயத்தையல்லவா
போற்றவேண்டும்!
எனது சமயத்தை ஏன்
தூற்ற வேண்டும்?

தயவு செய்து
எந்தன் சமயத்தைப் பழியாதீர்கள்!
எந்தச் சமயத்தவருக்கும்
தீங்கு இழையாதீர்கள்!

சமயம் என்பது
மனத்து அழுக்குகளைச்
செதுக்கிச் சுத்தமாக்கும் பெரும்
உளி!
அதற்கு -
கடவுளை ஆதாரமாக்கும் ஒரு வழி!

கடவுள் ஒன்று, சாமியார்,
வழிகளில் பல!

எல்லா வழிகளும் மனிதருக்கு
நல்வழி காட்டும் விழிகளே!

சமயங்கள்
ஒன்றோடொன்று மோதிய காலம்
வெம்பி விழுந்துவிட்டது!
அதனைத் தொடர்ந்து –
ஒன்றையொன்று மதிக்கும் காலம்
நம்பிக் கொழுந்துவிட்டது!

நீங்கள் முன்பு
எந்தன் சமயத்தில் இருந்தது
உங்கள் பேச்சிலிருந்து புரிந்தது.
ஆனால்,
அதில் உங்களுக்கு நம்பிக்கை
இருக்கவில்லை என்பதும் தெரிந்தது!

இல்லாத காரணத்தாலேயே
வேறு சமயத்துக்கு மாறினீர்கள்.
சாமியாராகவும் தேறினீர்கள்!

நல்லது.
அது உங்கள் சுதந்திரம்!
மரத்துக்கு மரம் தாவும்
குரங்குச் சுதந்திரம்!
சொல்லுங்கள்
உங்கள் மனைவியைவிட்டு
வேறு ஒரு பெண்ணுக்கு
எப்பொழுது தாவப் போகிறீர்கள்?

தாவமாட்டீர்கள்!
ஏனென்றால்
உங்கள் மனைவியை நீங்கள்
நன்றாகவே அறிந்திருப்பீர்கள்!

நன்றாக அறிந்து பழகிய ஒருவரை
விட்டுப் பிரிய மனம் வராது,
அல்லவா?
பிறந்த சமயத்தைப் பற்றி
நன்கு அறியாதபடியால்
அதனை விட்டீர்கள்!
சிறந்த சமயம் என்று வேறு ஒன்றைத்
தொட்டீர்கள்!

தொட்டதைத் தானும் நீங்கள் சரியாகக்
கற்றுப் பார்க்கவில்லை!
உண்மை சமயிகள்
மற்றவர் நம்பிக்கையில்
குற்றம் பார்ப்பதில்லை!

எனது சமயம் ஒரு பலாப் பழம்.
அறியாமையால் –
முட்டுப்படும் முள்ளைப் பற்றியும்
ஒட்டுப்படும் பாலைப் பற்றியும்
தட்டுப்படும் பொச்சைப் பற்றியும்
மலங்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

நான் களையை
உண்ட சுவையில்
இலங்கிக் கொண்டிருக்கிறேன்!

போங்கள், வராதீர்கள்!
நீங்கள் போதகரல்லர்!
மற்றவர் சுதந்திரத்தை,
சிந்தனையை
நம்பிக்கையை
மதிக்கத் தெரியாத பாதகர்!

– வி. கந்தவனம்

## இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| ஒலியிழை நாடாக்கள்<br>சமய வாழ்க்கை<br>சைவத்தின் பெருமை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
வரிவிலக்குள்ள ஒரு தரும தாபனமாகப்
பதிவு செய்யப் பெற்றது.
பதிவு இல: 1201762.

The Hindu Religious Society of Ontario
is a registered Charitable Organization
with tax relief. Reg. No. 1201762.